அந்த காலத்தில் தனி நபர் பெறும் வருமானம் மிகவும் குறைவு மாதம் 50ரூ வருமானம் உள்ளவர்கள் கூட வாழ்க்கையை கூட வாழ்க்கையை ஓட்டிவிடலாம் ஆனால் மரியந்தோணி நாடார் தனது நில அளவை மறும் அது சம்பந்தமான அனைத்து வேலைகளிலிருந்தும் பெறும் ஊதியத்தை தனது குடும்பத்தாருக்கு செலவழிக்காமல் தனது செலவுகளையே செய்து வந்ததால் குடும்பம் கஷ்டத்தில் மூழ்க தொடங்கியது மேலும் அந்த காலத்தில் விவசாயம் தான் குடும்ப வாழ்வாதாரமாக இருந்ததது. போதிய நிலம் வைத்திருப்பவர்கள் வசதி படைத்தவர்களாயிருந்தார்கள் திரு.மரியந்தோணி நாடாரின் மூதாதையர்கள் நல்ல செல்வந்தர்களாயிருந்தனர். அந்த வகையில் மதுரேந்திர நாடாருக்கும் சொத்துக்கள் அதிகமாகவே இருந்தது. மதுரேந்திர நாடார்ருக்கு இரண்டுமகள்களும் ஒரு மகளும் இருந்தனர். மகள் பெயர் ராயம்மாள், மூத்த மகனின் பெயர் மைக்கிள் நாடார் ஆரம்ப காலத்தில் மூவருமே நல்ல செல்வந்தர்களாக தான் இருந்தனர் ராயம்மாள் அத்தைக்கு ஒரு மகளும் ஒரு மகனுமாயிருந்தனர் மூத்த மகள் மைக்கிள் அவர்கள் சிலோனில் டாக்டராக பணிபுரிந்து தனது பூர்வீக சொத்துக்கு மேல் செல்வங்களை சேர்த்திருந்தார் ஆனால் கடவுள் அவருக்கு வாரிசு கொடுக்கவில்லை ஆதலால் மிகவும் ரகசியமாக ஒரு மகளை தத்தெடுத்து மிகவும் பாசமாகவும், உயர்நிலையிலும் வளர்த்து வந்தார். ஊரே மெச்சும்படி வளர்த்து வந்தார், பேரழகியாக வளர்ந்த அந்த பெண் ஒரு வளர்ப்பு பெண் என்று யாரும் நினையாத அளவில் வளர்ந்தது. மரியந்தோணி நாடார் தனது தந்தையின் மதுரேந்திர நாடார் மறைவுக்கு பின் சொத்து சுகங்களில் அக்கறையின்றி அத்தனையும் விற்றுவிட்டார் அதனால் பிரதாப் சிங் குடும்பத்தில் வறுமை தாண்டவமாடியது. அந்த வறுமையை பிரதாப்சிங் அன்னை மிகவும் சாமர்த்தியமாக கையாண்டு தனது 8பிள்ளைகளையும் சிறப்பாகத்தான் வளர்த்து வந்தார்கள். பிள்ளைகள் அனைவருக்கும் ஏதாவது ஒரு கை தொழிலை சொல்லி கொடுத்து அதில் வரும் வருமானத்தை கொண்டு ஊரே மெச்சும்படி பிள்ளைகளை வளர்த்தார்கள், மாடு வளர்த்து அதிலுள்ள பால் தயிர் போன்றவைகளை தேவையானவர்களுக்கு கொடுத்து சிறிது வருமானத்தை ஈட்ட பசியின்றி பிள்ளைகளை வளர்த்தார்கள். அந்த காலத்தில் படிப்பு என்பது ஒரு சிலருக்கு மிகவும் கடினமான செயலாகவே இருந்தது. அந்த காலத்தில் எட்டு வயதானாலே ஏதாவது வேலைக்கு சிறுவர்களை அனுப்பி விடுவார்கள். சிறுவர்களும் அந்த வயது பெற்றோர்களை பிரிந்து வெளியூர் சென்று 5 அல்லது 10ரூபாய் மாதம் அனுப்புவார்கள். ஆனால் பிரதாப்சிங் அம்மா பிள்ளைகளை கஷ்டப்பட்டு படிக்க வைத்தார்கள். அந்த காலத்தில் வடக்கன் குளத்தை பொருத்தமட்டில் அந்த வட்டாரத்திலேயே அதிக கல்லூரி, பள்ளி கூடங்கள் இருந்த கிராமம் ஆகும். கத்தோலிக்க கிறிஸ்தவ பாதிரியார்களும் மற்ற கிறிஸ்தவர்களும் போட்டி போட்டுக்கொண்டு கல்வி கூடங்களை ஆரம்பித்து கல்வியை போதித்தார்கள். அப்போது 5ஆம் வகுப்பு வரை கல்வி இலவசமாக போதிக்கப்பட்டது. அநேகமாக அரசாங்க உதவி பெற்ற பள்ளிகளாகவே இருந்தது. ஆனால் 6ஆம் வகுப்பிலிருந்து 8ஆம் வகுப்பு வரை பள்ளிகளில் கல்வி கட்டணம் $2\frac{1}{4}$ ரூபாயாகவும் 9ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரை $5\frac{1}{4}$ ரூபயாகவும் இருந்தது. இந்த கட்டணத்தை கூட பலர் கஷ்டப்படுவார்கள், பல இளைஞர்கள் இந்த கட்டணத்தை கூட கட்ட முடியாமல் பாதியிலேயே படிப்பை முடித்து ஏதாவது ஒரு சிறு வேலைக்கு சென்றுவிடுவார்கள் ஆனால் பிரதாப் சிங் குடும்பத்தில் அனைவருமே படித்தவர்களாகிவிட்டார்கள் அதற்கு உறுதுணையாக இருந்தது அவர்களது பெரியப்பா மிக்கேல் நாடார் ஆவார். பிரதாப் சிங் குடும்பத்தில் படிப்பு செலவு அத்தனையையும் பெரியப்பா மிக்கேல் நாடார் ஏற்றுக் கொண்டார். ஆகவே அவர்கள் குடும்பத்தில் படிப்பு எந்தவித தடையுமின்றி வெற்றிகரமாக நடந்து அனைத்து பிள்ளைகளும் படிப்பில் மிகவும் தேர்ந்தவர்கள் ஆனார்கள்.

- தொடரும்..........

நாடார் திருமணச் சேவையில் 19 ஆம் ஆண்டில் கைராசியான
நாடார் விவாகம் திருமணத் தகவலகம்

36, காந்தித்தெரு, பூவரசூர், ஆறுமுகனேரி-628 202
செல்:9176051116, 9360539833. 04639-282222. 04639 296108.
nadar vivahammatrimony / www.nadarvivaham.in/ GET IT ON Google Play
புரோக்கர் கமிசன் இல்லை. காலை:9:30 -12.30 மாலை 5.00 -6.00 ஞாயிறு விடுமுறை.
இணையதளத்தில் பதிவுக்கட்டணம் இலவசம்.
தென்றல் திருமணத் தகவலகம்
பதிவுக் கட்டணம்:ரூ.3000 /சேவை கட்டணம் உண்டு.
முனைவர் த.த.தவசிமுத்து M.A., Phd.,


Prop.S.Vijayan, Cell: 98403 53031. (0)044/ 26623031.
SRI LAKSHMI ENTERPRISES
Scaffollding & Shed contractor / School, College, Church & Construction Company / All Type Shed Works
28/54, Cooks Road, P.B. Chennai, Chennai-12.

# ஸ்ரீ பாலாஜி
# நாடார் திருமண தகவல் மையம்



**நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம் எங்களிடம் குமரி மாவட்டம், நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நாடார்களுக்கும் (இந்து, கிறிஸ்தவர்) வட்டார பழக்கத்திற்கேற்ப வரன் பார்த்து தரப்படும்.**



**ஒருமுறை பதிவு கட்டணம் ரூபாய்-3000 மட்டும்.**
**நகை ஷராக்கத்திற்கு கமிஷன் கிடையாது.**

**முகவரி: எண்:389, T.H.Road, (மெட்ரோ பில்லர் எண்-182), திருவொற்றியூர், சென்னை-19.**
**நிறுவனர்- R.சத்தியவான், இருளப்பபுரம், நாகர்கோவில்- 9444247847.**

**தொடர்பு எண்: 044-43508080, 7299989798, 8056299454, 7092890830.**


# காமராஜர் ஒரு சகாப்தம்

**ஏ.கோபண்ணா.**

**தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்**

1930இல் காந்தியடிகள் உப்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினார். வட இந்தியாவில் மார்ச் 12இல் தண்டியில் காந்தியடிகள் தலைமையிலும் தென் இந்தியாவில் ஏப்ரல் 13ல் வேதாரண்யத்தில் ராஜாஜி தலைமையிலும் உப்புச் சத்தியாக்கிரகம் நடத்த, நாள் குறிக்கப்பட்டது. இந்தியா முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தத் தொண்டர்கள் குவியத் தொடங்கினார்கள். காந்தியடிகள் தலைமையில் நடந்த உப்புச் சத்தியாக்கிரகம் உலகின் கவனத்தை ஈர்த்தது. ராஜாஜியும் மற்ற தலைவர்களும் கைது செய்யப்பட்டார்கள். அடக்குமுறையும் தடியடியும் தாண்டவமாடின. பிரிட்டனில் வெள்ளையர்களே இதைக் கண்டித்தார்கள். காமராஜரும் கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். இதுவே அருக்கு முதல் சிறைவாசம். தண்டனை பெற்ற காமராஜரைத் திருச்சி மத்திய சிறையில் வைத்து, அங்கிருந்து பெல்லாரிக்குக் கொண்டு சென்று அலிப்புரம் சிறையில் அடைத்தனர். பேரன் சிறை சென்றதைக் கேட்டுப் பார்வதியம்மாள் படுத்த படுக்கையாகி நினைவிழந்தார். நாட்டாண்மை துரைசாமியும் முருக தனுஷ்கோடியும் அலிப்புரம் சென்று பாட்டியின் உடல் நிலையைக் காரணம் காட்டிப் பரோலில் அழைத்துவர முயன்றனர். பரோலில் வரக் காமராஜ் மறுத்து விட்டார். காந்தி இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டபின் 1931மார்ச் 12இல் போராடிச் சிறை சென்ற எல்லாரையும் அரசு விடுதலை செய்தது, காமராஜரும் விடுதலை பெற்றார். விடுதலையாகி விருதுநகர் திரும்பிய காமராஜருக்கு மிகப் பெரிய வரவேற்பு கொடுக்கப்பட்டது. உள்ளூர் மக்களும் சுற்றுப் பக்கத்துக் கிராம மக்களும் திரண்டு, ரயில் நிலையத்திலிந்து வீடுவரை ஊர்வலம் நடத்தி வரவேற்றனர். தம் வீட்டின் அருகிலிருந்த காளியம்மன் கோவில் பீடத்தில் ஏறிச் சுருக்கமாக நன்றி கூறினார். விடுதலையாகி வீட்டுக்கு வந்த பேரனைக் கண் திறந்து பார்க்காமலே, சில நாள்களில் பாட்டி உயிர் விட்டார். சடங்குகளை எல்லாம் முன்னின்று நடத்திய காமராசர் தோளில் துண்டு போடும் வழக்கத்தை மேற்கொண்டார்.

விடுதலையாகி வெளியே வந்தவுடன், 1931இல் மதுரையில் நடத் தமிழ்நாடு காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்றார். இந்த மாநாட்டில்தான் ராஜாஜி கோஷ்டி, சத்தியமூர்த்தி கோஷ்டி என்ற இரு பிரிவுகள் தோன்றின. ராஜாஜி பக்கம் படித்த பட்டதாரிகளும் செல்வந்தர்களும் சமுதாயத்தில் செல்வாக்கு மிக்கவர்களும் இருந்தார்கள். ஆனால், சத்தியமூர்த்தி கோஷ்டியில் இளைஞர்களும் முழுநேரத் தொண்டர்களும் ஏழை எளியவர்களும் அதிகமாக இருந்தனர். மதுரை மாநாட்டுக்குச் சத்தியமூர்த்தி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். அடுத்து வரும் தேர்தலில் ராஜாஜியைத் தலைவராகவும், சத்தியமூர்த்தியை உபதலைவராகவும் தேர்ந்தெடுப்பதெனச் சமரசம் ஏற்பட்டது.

அதன்படி ராஜாஜி தலைவரானார். தலைவரானதும் சமர உடன்படிக்கைக்கு மாறாக உப தலைவர் தேர்தலுக்குச் சர்தார் வேதரத்தினம் பிள்ளையை நிறுத்தினார். இதைக் கண்டு ஆத்திரம் அடைந்த சத்தியமூர்த்தி கோஷ்டியினர் அண்ணாமலைப்பிள்ளையை முன்மொழிந்தனர். இதைத் தொடர்ந்து ராஜாஜி கோஷ்டியினர் சமரசத்துக்கு வந்து சத்தியமூர்த்தியை உபதலைவராக ஏற்றுக் கொண்டனர்.

ராஜாஜிக்கும் சத்தியமூர்த்திக்கும் இடையே நிலவிய கோஷ்டிப் பூசல் காரணமாகக் காங்கிரஸ் காரியக் கமிட்டியைச் சத்தியமூர்த்தி கோஷ்டி கைப்பற்றியது.

- தொடரும்.........



# நாடார் நவீன சுயம் வரம்



## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:T.பொன்மாலா, சொந்தஊர்:மேலப்புதுக்குடி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-31.10.1997, நிறம்-புதுநிறம், உயரம்-5.6, ராசி-துலாம், நட்சத்திரம்-சித்திரை, படிப்பு-B.E., (CSE)., MBA., Senior System Engineer., Infosys., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் அணுகவும். 9003207002, 9444013984, e-mail:postbox33736@gmail.com., File No:M-328-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கேது | இராசி | | லக் |
| வியா | | | ராகு |
| செவ் | சுக் புத | சூரி சந் | |

| | | | |
|---|---|---|---|
| சுக் | கேது செவ் | | |
| | அம்சம் | | புத வியா |
| லக் சூரி | | | |
| | சந் | சனி ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:S.Shree Bharathi, சொந்தஊர்:-விருதுநகர், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-15.8.1999, நிறம்-மாநிறம், ராசி-கன்னி, நட்சத்திரம்-ஹஸ்தம், படிப்பு-M.Sc., Food Science., Food Scientist, Training Period, மாதவருமானம்-70,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:044-48542967, 9445010252 File No:M-502-G.

| | | | |
|---|---|---|---|
| | வியா சனி | | |
| | இராசி | | லக்சூ பு ரா |
| கேது | | | சுக் |
| | | செ | சந் |

| | | | |
|---|---|---|---|
| சூரி | சந் | | செவ் கேது |
| | அம்சம் | | வியா |
| | | | சுக் சனி |
| ராகு | லக் புத | | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:ம.பிரியதர்சினி, சொந்தஊர்:வேம்பார், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, தாம்பரம், பிறந்ததேதி-26.10.1998, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, படிப்பு-B.Com., Senior Quality Tester)., IT., -onprocess Technology, மாதவருமானம்-1,00,000 பெறும் இந்த மணமகளுக்கு, அன்பான படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 8667359303., 8608232687, File No: M-176-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| வியா கேது | இராசி | | |
| | | | செவ் ராகு |
| | சந் | சூரிபு சுக் | லக் |

| | | | |
|---|---|---|---|
| சுந்சனி | | வியா | |
| கேது | அம்சம் | | புத |
| லக் | | | ராகு செவ் |
| சூரி | சுக் | | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:S.ஐஸ்வர்யா,சொந்தஊர்:பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-நீதிபதிகள் குடியிருப்பு, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை, நிறம்-மாநிறம், உயரம்-5.3. எடை:57கிலோ, ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, பிறந்ததேதி-16.4.1998, படிப்பு-B.E., ECE., Thiagarajar College - madurai., Preparing for Civil Services., (Selected in Group II TNPSC)., இந்த மணமகளுக்கு நன்கு படித்து, நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9443808324, 9486701789. File No:M-360-G.

| | | | |
|---|---|---|---|
| புத சனி | சூரி செவ் | | |
| சுக்குரு கேது | இராசி | | |
| | | | லக் ராகு |
| | சந் | | |

| | | | |
|---|---|---|---|
| | சூரி குரு | | செவ் |
| சுக் | அம்சம் | | லக் ராகு |
| சனிசந் கேது | | | |
| | | | புத |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:சிநேஹா, சொந்தஊர்:சாத்தூர், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-18.11.1991, வயது-32, ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, நிறம்-கோதுமைநிறம், உயரம்-5.3, படிப்பு-B.Tech., (CSE)., வேலை-சாப்ட்வேர் என்ஜீனியர், மாதவருமானம்-70,000/- பெறும் இந்த மணமகளுக்கு, நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9944410712, 9514952555, File No:M-370-G

| | | | |
|---|---|---|---|
| சந் | | | கேது |
| | இராசி | | லக் |
| சனி | | | குரு |
| ராகு | சூரி புத | செவ் | சுக் |

| | | | |
|---|---|---|---|
| சனி கேது | | சுக் | செவ் |
| புத | அம்சம் | | சூரி |
| லக் சந் | | | |
| (மா) | | | குரு ராகு |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்-காரிக்கோவில், குண்டல், திசையன்விளை அருகில், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-30.9.1995, வயது-27, நிறம்-மாநிறம், ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, உயரம்-5.3, படிப்பு-M.E, வேலை-Assistant Professor., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு நல்ல குடும்பம், நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள தூத்துக்குடி,திருச்செந்தூர், திருநெல்வேலி மணமகன் தேவை. 9445307067, 9445426581, 6380306138, File No:M-154-G

| | | | |
|---|---|---|---|
| | கேது | லக் | |
| சனி | இராசி | | |
| | | | |
| | சந் வியா | செவ் ராகு | சூபு சுக் |

| | | | |
|---|---|---|---|
| லக் சந் | சூசெ கேது | | |
| சனி | அம்சம் | | சுக் |
| புத | | | |
| வியா | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:S.சபரி ஜான்சி, சொந்தஊர்:மேலகானம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-மும்பை, பிறந்ததேதி-7.11.1997, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம், நிறம்-புதுநிறம், உயரம்-145செ.மீ, படிப்பு-B.A.F., Accountant., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9833487785, 8108518957. 9949410787, File No:M-537-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கேது | இராசி | | இராகு |
| சந் வியா | | | |
| செவ் சுக் | லக்பு மாந் | சூரி | |

| | | | |
|---|---|---|---|
| | சந்சூரி கேது | | செவ் சுக் |
| | அம்சம் | | வியா |
| மா | | | |
| | லக் | புசனி இரா | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:வா.பவித்ரா, சொந்தஊர்:-வீரமாணிக்கம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-குரோம்பேட்டை, சென்னை, பிறந்ததேதி-20.9.1996, வயது-27, நிறம்-சிவப்பு, உயரம்-5.5, ராசி-தனுசு, நட்சத்திரம்-மூலம், படிப்பு-M.Com., படித்த இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள சென்னையில் சொந்தவீடு உள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9841668844, 9941473733, File No:M-459-G.

| | | | |
|---|---|---|---|
| சனி(வ) கேது | | | |
| லக் | இராசி | | செவ் சுக் |
| | | | புதன் |
| வியா சந் | | | ராகு சூரி |

| | | | |
|---|---|---|---|
| | | லக்சந் ராகு | |
| சூரி | அம்சம் | | சனி புத |
| சுக் | | | |
| | கேது | செவ் | வியா |

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:தீபலட்சுமி, சொந்தஊர்:வள்ளிவிளை, திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-6.3.2000, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-கும்பம், நட்சத்திரம்-புரட்டாதி 2பாதம், படிப்பு-M.Com., படித்த மாதவருமானம்-25,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்த வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9444430146, 9962532515, File No:M-361G

| | | | |
|---|---|---|---|
| செவ் | குரு சனி | | |
| சூரிபுத சந் | இராசி | | ராகு |
| சுக் கேது | | | |
| | | | லக் |

| | | | |
|---|---|---|---|
| லக் | சூரி | சந் | |
| கேது செவ் | அம்சம் | | குரு சனி |
| | | | ராகு சுக் |
| | | புத | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:-அ.காமாட்சி, சொந்தஊர்-சிவத்தையாபுரம், தூத்துக்குடி (மா), இருப்பிடம்-சென்னை, அம்பத்தூர், பிறந்ததேதி-25.4.1994, நிறம்-மாநிறம், ராசி-துலாம், நட்சத்திரம்-சித்திரை, உயரம்-158செ.மீ, படிப்பு-B.E., படித்த இந்த மணமகளுக்கு, நல்ல குணமுள்ள நல்ல வேலையுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9943281966, 9597341637. File No:M-544-G.

| | | | |
|---|---|---|---|
| செவ் | புத சூரி | லக்கே சுக் | |
| சனி | இராசி | | |
| | | | |
| | ராகு | சந் வியா | |

| | | | |
|---|---|---|---|
| வியா | | லக் | |
| சுக் | அம்சம் | | சூரி ராகு |
| கே | | | புதன் |
| சனி | செவ் | சந் | |

# இலவச திருமணத் தகவல்

தொடர்புக்கு: 30, தேரடி தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.
போன்:23811087.

## மணப்பெண் பகுதி (பெண்) — இந்திய நாடார் முரசு இலவச சேவை

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | செல்நம்பர் | இராசி-நட்சத்திரம் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இந்து நாடார் பகுதி | | | | | | | | | |
| 1. | திருநெல்வேலி | 26 | B.Com., | உயர்கல்விபடித்துநல்லவேலை | 155 | 6381114634 | கேட்டைவிருச்சிகம் | M529 | 25பவுன் |
| 2. | தூத்துக்குடி | 28 | M.A.,P.hD., | டிகரிபடித்துநல்லவேலை | 5.5 | 9841185115 | தனுசு-மூலம்3ம்பாதம் | M530 | நேரில் |
| 3. | மேலநடுவக்குறிச்சி | 29 | B.Tech.,(ECE)., | நன்குபடித்துIT,வேலை | 160 | 9445120430 | கடகம்-ஆயில்யம்3 | M531 | நேரில் |
| 4 | வன்னிமாநகரம் | 25 | M.Com., | படித்துநல்லவேலையிலுள்ள | 5.2 | 8825442372 | கன்னி-ஹஸ்தம் | M532 | நேரில் |
| 5 | காயாமொழி | 24 | B.E.,EEE | படித்துவேலை/தொழில் | 154 | 9092555754 | கடகம்ஆயில்யம் | M533 | 20பவுன் |
| 6 | கருவேலம்பாடு | 25 | Diploma | படித்துநல்லவேலையிலுள்ள | 5.7 | 7358560017 | மேஷம்கார்த்திகை | M534 | 40பவுன் |
| 7 | வன்னிமாநகரம் | 27 | B.E., | பி.இபடித்துநல்லவேலை | 5.5 | 9444432090 | ரிஷபம்-கார்த்திகை | M535 | 70பவுன் |
| 8 | ஆறுமுகநேரி | 34 | MBA., HCL | படித்துநல்லவேலைசெய்யும் | 160 | 9841160453 | கடகம்-பூசம் | M536 | 35பவுன் |
| 9 | மேலகானம் | 27 | B.A.F., Account | டிகரிபடித்துநல்லவேலை | 145 | 9833487785 | மகரம்திருவோணம் | M537 | 40பவுன் |
| 10 | தூத்துக்குடி | 32 | B.E., Govt Job | பி.இபடித்துநல்லவேலை | 5.4 | 9944874005 | மகரம்உத்திராடம்2 | M538 | நேரில் |
| 11 | ஆறுமுகநேரி | 23 | B.Sc.,B.Ed.,(M.sc) | டிகிரிபடித்தநல்லவேலை | 5.5 | 9944244518 | கடகம்-பூசம் | M539 | 80பவுன் |
| 12 | ஆறுமுகநேரி | 30 | MBBS.,MS,DNB | MD/MSபடித்தபெண் | 5.2 | 9176929661 | சிம்மம்-உத்திரம் | M540 | நேரில் |
| 13 | திருநெல்வேலி | 23 | B.A., Tamil | டிகிரிவேலை(அ)தொழில் | 165 | 9324173627 | விருச்சிகம்அனுசம் | M541 | 13பவுன் |
| 14 | மேலசெய்தலை | 24 | M.Sc.,Chemistry | நன்குபடித்துநல்லபணி | 5.5 | 9659150925 | ரிஷபம்-ரோகிணி | M542 | நேரில் |
| 15 | அட்டிபட்டி,மதுரை | 28 | MBA., | பட்டம்படித்துநல்லகுணம் | 5.8 | 9003126075 | துலாம்-சித்திரை | M543 | நேரில் |
| 16 | சிவத்தையாபுரம் | 30 | B.E., | நல்லகுணமுள்ளநல்லவேலை | 158 | 9943281966 | துலாம்-சித்திரை | M544 | நேரில் |
| C.S.I.நாடார் | | | | | | | | | |
| 1 | நாகர்கோவில் | 28 | M.Com., | நன்குபடித்துநல்லவேலை | 5.2 | சென்னை | 8056697306 | 471-G | நேரில் |
| 2 | புதுக்கோட்டை | 25 | M.C.A., | பட்டதாரி நல்லவேலை | 5.4 | சென்னை | 9840750769 | 472-G | நேரில் |
| 3 | நாகர்கோவில் | 29 | MBBS.,MD., | நன்குபடித்துநல்லவேலை | 165 | சென்னை | 9444339144 | 473-G | நேரில் |
| 4 | தூத்துக்குடி | 28 | 10th Std | கிறிஸ்துவநாடார் | 5.6 | சென்னை | 9841969737 | 474G | நேரில் |
| R.C.நாடார் | | | | | | | | | |
| 1 | தூத்துக்குடி | 27 | M.A.,englit.,B.ed | நன்குபடித்துநல்லவேலை | 5.3 | சென்னை | 9578396593 | 380-G | நேரில் |
| 2 | கன்னியாகுமரி | 26 | B.E., CSE., | ஐ.டி/சப்ட்வேர்நல்லவேலை | 5.3 | சென்னை | 9370884061 | 381-G | 20பவுன் |
| 3 | மார்த்தாண்டம் | 24 | B.E.,Computersci | டிகிரிபடித்துவேலையிள்ள | 162 | சென்னை | 7338867197 | 388G | நேரில் |
| 4 | திருநெல்வேலி | 24 | B.Com., | டிகிரிபடித்துவேலையிள்ள | 6.1 | சென்னை | 9841847863 | 389G | 35பவுன் |

நாடார் வரன்கள் வேண்டுமா?

இம்பம்
நாடார் திருமண தகவல் மையம்
என்றென்றும் நமது பாரம்பரியத்தின் அடையாளம்....

ஒரு முறை
பதிவுக் கட்டணம்
மட்டுமே!

நகை, ரொக்கத்திற்கு
கமிஷன் கிடையாது.

72995 56591 72995 56592

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:சு ஜி.ஜெ.லோகேஸ்வரி, சொந்தஊர்:அகோபாலபுரம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, மேடவாக்கம், பிறந்ததேதி-14.8.1998, நிறம்-மாநிறம், ராசி-மேஷம், நட்சத்திரம்-பரணி, படிப்பு-B.Com., MBA., வேலை-உதவி பேராசிரியர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலை அறிவியல் கல்லூரி, இந்த மணமகளுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9840041985, 9962751985. File No:-M-526-G.

| | | | |
|---|---|---|---|
| வியா | சந்சனி லக் | | |
| கேது | இராசி | | சூரிசுக் செபுத |
| | | | ராகு |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| சூரி | சனி | லக் | ரா |
| | அம்சம் | | செவ் வியா |
| | | | |
| | சந் | புத | சுக் |

## R.C. கிறிஸ்துவ நாடார் மணமகன் தேவை

பெயர்:செல்வ ஜெப சூர்யா.எஸ்., சொந்தஊர்-இரம்மதபுரம், திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-18.12.1999, வயது-24, உயரம்-6.1, நிறம்-மாநிறம், படிப்பு-B.Com., படித்த இந்த மணமகளுக்கு, டிகிரி படித்து வேலை (அ) தொழில் செய்யும் மணமகன் தேவை. தொடர்புக்கு: 9677104807, 9841847863. File No:RC-389-G.

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:J.கமலி, சொந்தஊர்:தென்காசி, ஆவுடையனூர், நெல்லை மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-5.12.1997, நிறம்-மாநிறம், உயரம்-5.8, ராசி-மகரம், நட்சத்திரம்-அவிட்டம் 1ம் பாதம், படிப்பு-M.Com., Accenture, மாதவருமானம்-25,000 பெறும் இந்த மணமகனுக்கு, B.E or Double Graduate மணமகன் தேவை. 9841424704, 9884255023. File No:M-551-G

| | | | |
|---|---|---|---|
| சனி | | லக் | |
| கேது | இராசி | | |
| சுக்சந் குரு | | | ராகு |
| செவ் மாந் | புத(வ) சூரி | | |

| | | | |
|---|---|---|---|
| | கேது | | |
| | அம்சம் | | |
| லக்சுக் புத(வ) | | | குரு சந் |
| சூரிசெ மாந் | | ராகு சனி | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:R.கார்த்திகா, சொந்தஊர்:தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-5.11.1996, நிறம்-மாநிறம், ராசி-சிம்மம், நட்சத்திரம்-பூரம், படிப்பு-BCA., I.T., வேலை, மாதவருமானம்-45,000, உயரம்-5.3, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9444436383, 9840932494 File No:M-323-G.

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| சனி | இராசி | | லக் |
| | | | செவ் சந் |
| வியா | | சூரி புத | சுக் இரா |

| | | | |
|---|---|---|---|
| சூரி | இரா | சுக் | சனி செபுத |
| | அம்சம் | | |
| லக் | | | சந் |
| | | வியா கேது | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:-V.மோனிஷா, சொந்தஊர்-கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, தரமணி, பிறந்ததேதி-16.11.1995, நிறம்-சிவப்பு, ராசி-சிம்மம், நட்சத்திரம்-மகம், உயரம்-5.1, படிப்பு-B.E., (CSE)., இந்த மணமகளுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 9940653170, 9094339641 File No:M-201-G.

| | | | |
|---|---|---|---|
| | கேது | லக் | |
| சனி (வ) | இராசி | | |
| மாந் | | | சந் |
| | செகுரு சுக் | ராசூரி புத | |

| | | | |
|---|---|---|---|
| | கேது | சனி | லக் புத |
| செகுரு மா | அம்சம் | | சூரி சந் |
| சுக் | | | |
| | | ராகு | |


C.மதியழகன்

செல்:9789095625.

வாழ்க வளமுடன்

SGB

# ஸ்ரீ கணேஷ் பவன்



எண்:6, முத்துலிங்க ரெட்டி தெரு, (எம்.ஆர்.தியேட்டர் பில்டிங்) மேற்கு தாம்பரம், சென்னை-45. போன்:M.சுரேஷ். செல்:9840945243.

எண்:1, வள்ளலார். தெரு, சேலையூர், கேம்ப்ரோடு, சென்னை-73.

# செவ்வாய் பகவான் தோஷபரிகார ஸ்தலம்

எஸ்.வி.சிவசம்பந்தம் அவைத்தலைவர், பெருந்தலைவர் மக்கள் கட்சி, தஞ்சை வடக்கு மாவட்டம்-செல்:9245344808.

அன்னை பார்வதி தேவி பக்தர்களின் வாழ்வில் சர்வமங்களங்களையும் வாரி வழங்கும் வள்ளல் பிராட்டியாக மங்களாம்பிகை எனும் திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கும் தலங்கள் ஐந்து முக்கியமானவை. அவை கும்பகோணம் ஸ்ரீ மங்களாம்பிகை, திருமங்கலக்குடி ஸ்ரீமங்களாம்பிகை, ஸ்ரீவாஞ்சியம் ஸ்ரீமங்களாம்பிகை, உத்தரகோச மங்கை ஸ்ரீ மங்களாம்பிகை மற்றும் திருச்சிலுகுடியில் உள்ள மங்களாம்பிகை என பஞ்ச தலங்களாக உள்ளது. மேலும் இச்சிலுகுடியில் ஸ்ரீ மங்களாம்பிகை உடனுறை ஸ்ரீ சூட்சம புரீஸ்வரராக எம்பெருமான் அருள்பாலிக்கிறார்.பக்தர்கள் அனைவரும் இப்பெருமானை மங்களநாதர் என்றே அழைக்கின்றனர் சர்வ வல்லமை படைத்த தேவி பார்வதியானவள் தனது திருக்கரங்களால் மணலால் லிங்கம் அமைத்து பூஜித்த தலமாகும். இச்சிறுகுடியில் உள்ள லிங்கம் மணலால் அமைந்த காரணத்தால் இறைவனுக்கு அபிஷேகம் கிடையாது. இறைவிக்கு மட்டுமே அபிஷேகம் நடைபெறுகிறது. செவ்வாய் பகவான் தனக்கு ஏற்பட்ட தொல்லைகளில் இருந்து விடுபட இத்தலத்து ஈசனை வழிபட்டு விமோசனம் அடைந்த காரணத்தால் இத்தலம் செவ்வாய் பகவான் பரிகாரத் தலமாகவும் விளங்குகின்றது. செவ்வாய் பகவானைப்பற்றி மற்றொரு கட்டுரையில் பார்ப்போம். கடன், நோய், சத்துரு எதிர்ப்பு, வழக்கு தடங்கல் திடீர் விபத்து, பித்த சம்பந்தமான் நோய்கள், இரத்த அழுத்தம், இரத்த புற்றுநோய், உடல்வலி அவஸ்தை, மூட்டுகளில் வலி, கர்ப்பபை கோளாறுகள் மாதவிடாய் கோளாறுகள், தீக்காயங்கள், உடலில் எரிச்சல், நமச்சல், குடைச்சல் மற்றும் கடன் தொல்லையால் பயம், அவமானம், சொத்துச்சண்டை, உறவுச்சண்டை போன்ற அனைத்து குறைபாடுகளையும் நீக்கி, அருளக்கூடியவர்களே இத்தலத்து இறைவனும் இறைவியும் ஆவார்கள்.

இறைவிக்கென தனி சன்னதி அமைந்துள்ள கோயிலாகும்.

செவ்வாய் பகவான் ஒருவரது ஜாதகத்தில் இரண்டாம் இடத்தில் இருந்தால் வாக்குவாதங்களும் குடும்ப பிரிவும், நான்காம் இடத்தில் இருந்தால் உடல்கோளாறு, சுகக்குறைவும் ஏழாம் இடத்தில் இருந்தால் கணவன் மனைவிக்குள் அடிக்கடி சண்டை ஏற்பட்டு கணவன் மனைவி பிரிவும், எட்டாம் இடத்தில் இருந்தால் மாங்கல்யதோஷம், ஆயுள் பீடை அவமானமும் பனிரெண்டாம் இடத்தில் இருந்தால் பல்வேறு விதமான விரயங்களும் உருவாக வாய்ப்புகள் ஏற்படலாம். இதனை தவிர்த்துக் கொள்ள ஒரு முறையேனும் இத்தலத்திற்கு வந்து செவ்வாய் பகவானுக்கு அபிஷேக ஆராதனை செய்து தோஷநிவர்த்தி பெற்று, ஸ்ரீ சூட்சமபுரீஸ்வரர் ஸ்ரீ மங்களாம்பிகை, அருளால் அனைத்து நலங்களையும் பெற்று பக்தர்கள் சுபிட்சமாக வாழ முயற்சிக்கவும் இக்கோயில் கிராமத்தில் உள்ள காரணத்தால் அனைத்து பொருள்களையும் தங்கள் ஊரிலிருந்தே எடுத்துச் செல்லவும். கும்பகோணத்தில் இருந்து பேரளம் வழியாக காரைக்கால் பேருந்தில் பயணத்து, கற்கத்தி எனும் ஊரில் இறங்கி, அங்கிருந்து ஆட்டோ மூலமாக கோயிலை அடையலாம். வாசக் நண்பர்களுக்கும், உறவுகளுக்கும் சமுதாயச் சொந்தங்களுக்கும் சமுதாய அமைப்புகளுக்கும் எனது உளமார்ந்த இனிய தீபஒளி வாழ்த்துக்கள்.



**REVATHI LABEL PRINTERS**

**R.DHEVI 98414 41111, 99415 51111**

**Barcode Sticker, Multi Colour Sticker, Trolley Tags, Thermal Ribbons, Barcode Printers, Consumar Lables & Software Support.**

Revathi label printers, Taj Bhavan, H-3/340, TNHB A Road, Phase-3, Sholinganallur, Chennai-119.
9841441111.Emaill: dhevi_rlp@yahoo.co.in

# நாடார் திருமணச் சடங்குகள்

--எஸ்.ஏ.இராம சந்திரடோகோ....

சந்தைக்கு வந்த சரக்குகள் மலிவாகிவிட்டால் அவைகளே இனாமாக கொடுப்பவர் எவரேனு முண்டோ? சமீப காலங்களில் கோதுமை விலை குறைந்து விட்டது என்பதற்காக அமெரிக்கர் ஆயிரமாயிரம் டண் கோதுமைகளை கடலில் கொட்டினர். கள்ளுக்கடையில் கள் விலைபோகவில்லையென்றால் நிலத்தில் கொட்டி வீணடிப்பார்களே தவிர விலையின்றி ஒருபோதும் கொடுக்கமாட்டார். அதுபோல் கயவர்க்கு வாழ்க்கைப்பட்டு கண்ணீர் வடிப்பதை விட கன்னித்தன்மை மாறாமல் காலங்கழித்தலே சாலச்சிறந்தது. உலகம் 'கன்னியம்மை' என்றாவது போற்றும். ஆதலால் பணத்தாசை பிடித்தலையும் பாவியர்க்கு ஒரு போதும் கன்னியரே கழுத்தை நீட்டாதீர்

பண்டைக்கால வழக்கம் போல் உங்களுக்கே பணம் பொருளும் தந்து மணந்துசெல்ல வாலிபர் தவங்கிடக்கும் காலம் வரும்.

இனி, வரதட்சணை என்னும் பேரால் பொருட்களை நேரிலோ மறைமுகமாகவோ கொடுக்கின்ற செல்வச் சீமான்களை கொடுஞ்சிறையில் தள்ள வேண்டும். மகளிர் நல சங்கங்களும் மற்றைய அமைப்புகளும் இதனைக் கண்காணித்து வரல் வேண்டும். அனைத்து திருமணங்களும் அரசு அதிகாரிகள் முன்னிலையிலேயே நடைபெற்று பதிவு செய்தல் வேண்டும். காதல் மணம் புரிவோர்க்கு கைகொடுக்க வேண்டும். வேற்றுநாட்டு மகளிர் போன்று தமிழக மகளிரும் நகை பைத்தியத்தை விட்டொழிக்க வேண்டும். அதிக வரதட்சணையுடன் வந்த பெண்ணை அரிவையரோ ஆடவரோ ஒரு போதும் புகழலாகாது. அவர்களை துச்சமென ஒதுக்க வேண்டும்.

வரதட்சணை வாங்கக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தும் நாடகத்தைப் பார்ப்போம், நாளிதழைப் படிப்போம், கட்டுரையைக் காண்போம், காவியங்கள் நடிப்போம், காரசாரமாய் மேடையிலும் பேசுவோம்- ஆனால், கணத்தில் மறப்போம். இதுதான் நம் இயல்பு. கல்வியறிவு பெற்றவரிடையே இம்மாதிரி கசடு இருப்பது கவலைக்குரியது. ஆதலின் இம்மாதிரி இழிகுணங்களை நீக்கிவிட்டு கற்றோர் செயலில் இறங்க வேண்டும்.

அரசாங்கமும் சட்டத்தை இயற்றி வைத்துவிட்டு பிரசாரம் செய்து தனக்கு அரசியல் ஆதாயம் தேடுகிறதேயொழிய சட்டத்தை அமுல் செய்வதைக் காணோம். வரதட்சணை அதிகமாக கொடுத்து மணமுடிக்கும் பேர்களை வழக்கு மன்றங்களுக்கு இழுத்து தண்டனை வழங்கவேண்டும். அல்லது வரதட்சணையாகக் கொடுத்த பெரும் பொருட்களை பறிமுதல் செய்து அரசுக்கு சொந்தமாக்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டிற்கு விளம்பரங்கள் செய்வது போன்று வரதட்சணைக் கொடுமையை ஒழிக்கும் பாங்கில் "வரதட்சணை வாங்குவதும், கொடுப்பதும் குற்றம்" என்று விளம்பரங்கள் செய்தல் வேண்டும். ஒரு அதிகாரி லஞ்சம் வாங்கினால் சட்டப்படி தண்டனையளிப்பது போன்று வரதட்சணை வாங்குவோர்க்கும் கொடுப்போர்க்கும் அரசு சலுகைகள் அனைத்தும் ரத்து செய்ய வேண்டும். (உணவுப் பங்கீட்டு அட்டை, வேலை வாய்ப்பில் ஜாதி அடிப்படையில் முதலிடம், மருத்துவ உதவிகள், கல்விச் சலுகைகள் முதலியன) ஊர் ஊராக வரதட்சணை கொடுமை பற்றி பிரச்சாரம் செய்தல் வேண்டும்.

கலப்பு மணம் செய்வோரை அரசு ஊக்குவிக்கும் வகையில் ஊக்கத்தொகை கொடுப்பது போன்று வரதட்சணை யேதுமின்றி மணஞ்செய்த தம்பதிகளுக்கு ஊக்கத்தொகையோ அல்லது வேலை வாய்ப்பில் முதலிடமோ அல்லது வேறுவிதமான அரசாங்க சலுகைகளோ கொடுக்க வேண்டும். திருமணங்களை பதிவு செய்யும்போது அத்திருமணத்திற்கு ஆனச் செலவை அரசு அதிகாரி கணக்கெடுத்துக் கொள்ள வேண்டும். வரம்புகளுக்கு மீறி செலவினங்கள் இருந்தால் அதை அரசு அதிகாரி கண்டிக்க வேண்டும். இனி வருங்காலத்தில் இம்மாதியான செயல்முறைகள் நடைமுறைக்கு வந்தாலே வரதட்சணைக் கொடுமையின் வாலை நறுக்க முடியும்.

ஒழுக்கமும் உயர்குணமும், உடல் ஆரோக்கியமும் உடைய ஆடவன் வாய்க்கப் பெறுவதே அரிவையர்க்கு பெரும் பேறாகும். செல்வத்தை சிறந்த பேறென சொல்வதற்கில்லை. ஏனென்றால் அது நிலையற்றது. போகும், வரும். ஆனால் ஒருவனுக்கு பிறவியிலேயே வாய்த்த குணமானது அவன் வாழ்நாள் முழுதும் நிலைத்திருக்கக் கூடியது. அதனால்தான்,

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்" - என்றுரைத்தார்

ஔவைபிராட்டியாரும் அழகாக.

ஆதலின் பெண் வீட்டாரின் நிலைமைக்குத் தகுந்தவாறு அவர்கள் மனநிறைவோடு தருவதை ஏற்று நம் குலப்பெண்களுக்கு திருமணங்களை நடத்தி வைப்போம். இது நமது சமுதாயத்தில் மேல் மட்டத்தில் இருக்கிறவர்களின் கடமையாகும். இதையே விரதமாகக் கொண்டு வீரசபதம் செய்வோம்!

அதை எந்தநாளும் காப்போம்!!
வாழ்க நாடார் திருமணச் சடங்குகள்!!
வாழ்க நாடார் குலம்!





செல்:9444484977, 9962454977, 044-25980239.

ஸ்ரீ மகா கணபதி ஜோதிட நிலையம்



ஜோதிடர்.த.பெ.சுந்தர் நாடார்

ப.எண்:8, பு.எண்:15, நல்லப்பவாத்தியார் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021.

**ஜாதகம் திருமண பொருத்தம் வாஸ்து பார்க்கப்படும்.** நேரம்:காலை8.00மணி முதல் மதியம்2.00 மணி வரை

# பாஞ்சாலி



எஸ்.விஜயராஜ்

**59...சதித்திட்டம்..**

வேகமாக வேலைகள் நடந்தன... அவை விரைவாகவும் கட்டி முடிக்கப்பட்டன.. அடுத்து..



திறப்பு விழா ஒன்றை நடத்த வேண்டும்.. அதற்கு பாண்டவர்களைத்தான் பிரதம விருந்தாளிகளாக அழைக்கவேண்டும்..

விழாவில்.. யுதிஷ்டிரனோடு துரியோதனன் சூதாட வேண்டும்..

ஆனால்... தனக்குள் அப்படி ஒரு திட்டம் இருப்பதாக அவன் வெளி காட்டிக்கொள்ளவே இல்லை..

யுதிஷ்டிரன் மீது எப்போதுமே சகுனிக்கு ஒரு நம்பிக்கை உண்டு... சூது விசயத்தில் மிக எளிதாக அவனை இணங்க வைத்து விட முடியும்..

சூது என்ற வார்த்தையை சொன்னாலே சிக்கி விடுவான் அவன்... சகுனியைத்தான் பெரிய சூதாடி என்று உலகம் சொல்லும்... ஆனால் உண்மை அதுவல்ல..

சகுனி திறமையான சூதாடி... ஆனால் யுதிஷ்டிரனோ.. பிறவி சூதாடி..

நாள் முழுக்க சூதாடலாம் என்றாலும் அவன் ஆடுவான்... உண்ணமாட்டான்... உறங்க மாட்டான்... உட்கார்ந்த இடத்தில் இருந்தபடி ஆடிக் கொண்டே இருப்பான்..

உன்னை ஜெயிக்க யாராலும் முடியாது என்று சொல்யிருப்பாருங்களேன்.. நாட்டையே துணிந்து பணயம் வைப்பான்.

அப்படி வைத்தால்... அதை விட்டு வைக்குமா சகுனியின் சோழிகள்... உருட்டி புரட்டி சுருட்டி விடுமே... எனவே தான்..

இப்படி ஒரு திட்டத்தை உருவாக்கினான்.. சகுனி.. ஆனால் அது பற்றி சின்ன ஒரு தகவலைக்கூட திருதராஷ்டிரனிடம் அவன் கூறவில்லை.

பாண்டவர்களை அழைப்பதற்கு.. முழுக்க முழுக்க.. சகோதர பாசமேதான் காரணம் என்பது போலவே நடித்தான் துரியோதனன்..

திருதராஷ்டிரனை நம்பவும் வைத்தான்..

அப்புறம் என்ன.. உடனே விதுரனை அனுப்பினான் திருதராஷ்டிரன்... பாண்டவர்களை அழைத்து வர உத்தரவிட்டான்.

60.யுதிஷ்டிரன் புறப்பட்டான்...

மண்டபத்தின் திறப்பு விழாவில் கலந்து கொள்ள வாருங்கள்..

பாண்டவர்களை இப்படி அழைக்கவே விதுரனை திருதராஷ்டிரன் அனுப்பி வைத்தான்..

வேறு பல மகாபாரத நூல்களில்.. சூதாட வாருங்கள் என்று அழைக்கவே.. விதுரனை அனுப்பினார்கள் என்றே சொல்லப்பட்டு இருக்கிறது..

ஆனால் சகுனி துரியோதனனின் திட்டம் அதுவல்ல..

விழாவுக்கு பாண்டவர்களை அழைக்க வேண்டும்... வந்த இடத்தில் அவர்களோடு உற்சாகமாக பேசி... அவர்களை சூதாட்டத்துக்குள் நுழைத்துவிட வேண்டும்..

அவர்களை தோற்கடிக்க வேண்டும்... நாட்டை பிடுங்கிக் கொள்ள வேண்டும்... இதுதான் துரியோதனன் சகுனி ஆகிய இருவரின் திட்டமாக இருந்தது..

இப்படிப்பட்ட ஒரு பயங்கர திட்டத்தை பகிரங்கப்படுத்துவானா துரியோதனன்..

அப்படி செய்தால் யுதிஷ்டிரன் அவனை சந்தேகப்படமாட்டானா.. அந்த அளவுக்கு விவரம் இல்லாதவனா அவன்...

உறவு முறையில் பாண்டவர்கள்.. மிகவும் நெருக்கமான உறவினர்கள்தான்... துரியோதனனுக்கு...

ஆனால் அவர்களுடைய அந்தரங்கத்திலோ... அப்படியெல்லாம் அவர்கள் இல்லை.

அவர்கள் இருவருமே ஒருவரை ஒருவர் வெறுத்தார்கள்.. பகைத்தார்கள்... ஒருவர் மற்றவரை விழுங்கவே நேரம் பார்த்தார்கள்... காரணம்..

பல பிரச்சினைகள் அவர்களுக்குள் இருந்தன... சொத்து பிரச்சினை... ஆட்சி பிரச்சினை... இப்படி எத்தனையோ..

- தொடரும்......

## கண்ணீர் அஞ்சலி



வடக்கன்குளம், மறைந்த தேவசகாயம் ஆசிரியர் புதல்வரும் மறைந்த டி.மரியதாசன் ஆசிரியரின் இளைய சகோதரருமான திரு.டி.வில்லியம் ஹென்றி. னB.Sc., (87) அவர்கள் 7.10.2024 அன்று இரவு காலமானார்.

## கண்ணீர் அஞ்சலி



பிறந்த தேதி
20.6.1944
மறைந்த தேதி:
23.10.2024
பெயர்:
திருமதி.பிரேமா மாணிக்கராஜ்.

மறைந்த திருமதி.பிரேமா மாணிக்கராஜ் அவர்களது விருப்பப்படி அவரது இரு கண்களும் தானமாக வழங்கப்பட்டது. நெல்லை அரவிந்த் கண் மருத்துமனை மருத்துவர் குழு வந்து பெற்றுச் சென்றனர்.

# படைவீடு

**S.D.சுந்தரேசன் I.A.S அரசு செயலர், அருணாச்சலப்பிரதேசம்.**



திரு.தமிழ் மகன் எழுதியுள்ள படைவீடு எனும் தலைப்பில் அமைந்த வரலாற்று நாவலை வாசித்தேன். மிகவும் விருவிருப்பான புதினம் இது.

தமிழக வரலாற்றில் இருண்டகாலமாக கொள்ளப்படும் களப்பிறர் காலத்திற்கு பின் 14ஆம் நூற்றாண்டும் அப்படியான குழப்பம் நிறைந்த காலமாக இருந்திருக்கிறது. சோழர்களின் வீழ்ச்சி மற்றும் நாயக்க மன்னர்களின் ஆட்சி காலத்திற்கு இடைப்பட்ட 100 வருடங்களில் நிலவிய சமூக அரசியல் நிலவரம் பற்றி தரவுகளோடு எழுதப்பட்டுள்ள வரலாற்று புதினமாக படைவீடு திகழ்கிது.



மதுரையை பாண்டிய மன்னர்களிடமிருந்து பிடித்து கோவில்களை கொள்ளையிட்டு வந்த மாலிக்காபூரை எதிர் கொள்வதற்கு தமிழ் சிற்றரசர்களை ஒருங்கிணைக்கும் சம்புவராய இளவரசரின் முயற்சி, மாலிக்காப்பூர் கொள்ளையிட்ட நகைகளின் ஒரு பகுதியை மீட்ட சம்புவாராய இளவரசரின் தீரம், டெல்லி சென்ற பின் மதுரையில் ஏற்பட்ட மதுரை சுல்தானியரின் கொடுமை நிறைந்த ஆட்சி, அக்காலத்தில் பாதிப்புக்கு உள்ளாகி தம் நாட்டில் அடைக்கலம் புகுந்த மக்களுக்கு தற்கால அகதிகள் முகாம் போன்று அஞ்சினான் புகலிடம் அமைத்து காத்த சம்பூவராயா மன்னர்களின் மாண்பு, ராசகம்பீரம் எனும் பெயருள்ள கோட்டை அமைத்து ஆட்சி செய்த சிறப்பு வீரம் போர்த்திறன் மிக்க படைகளுடன் விஜய நகர குமார கம்பணனின் முதல் படையெடுப்பை வெற்றிகரமாக எதிர்கொண்ட சம்புவரையர்களின் மாட்சிமை போன்றவை விவரிக்கப்பட்டுள்ளது.

எழுச்சி பெற்ற விஜயநகர குமார கம்பணன் மதுரையை சுல்தானியர் வசமிருந்து கைப்பற்றியது, பின்னர் அவனே சபூவராயர்கள் மேல் இரண்டாவது முறையாக போர்தொடுத்தது, சம்பூவராயர்கள் தம்மைவிட பல மடங்கு பெரிய விஜயநகர சேனையை தீரத்துடன் எதிர்கொண்டது, மிகவும் சிரமப்பட்டு குமார கம்பணன் பெற்ற வெற்றி போன்ற விபரங்கள் குமார கம்பணனின் கவித்துவம் மிக்க மனைவியான கங்காதேவி எழுதிய, மதுராவிஜயம் காவிய அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மூவேந்தர் ஆட்சி முடிந்த 13ஆம் நூற்றாண்டு வரை வடக்கிலிருந்து வந்த அனைத்து படைபெயடுப்புகளிலும் மூவேந்தர்களுக்கு துணைபுரிந்தவர்கள் சம்புவராயர்கள். தாம் தனியாக ஆட்சி செய்த 14ஆம் நூற்றாண்டு முழுவதும் வடகிலிருந்து வந்த படையெடுப்புகளை தீரத்துடன் எதிர்கொண்ட இறுதி தமிழ் மன்னர்களான சம்புவாராயர்களின் வரலாறு தரவுகளுடன் விவரிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்காலகட்டத்தில் தமிழ் சமூகத்தில் ஏற்பட்ட சாதி எவ்வாறு உருவாகி நிலை பெற்றிருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் என்றும் விவரித்திருக்கிறார் ஆசிரியர்.

புத்தகம் எழுதிய ஆசிரியர் மிகுந்த ஈடுபாடு கொண்ட உழைப்புக்கு பின் எழுதிய புதினம். அவரது படைப்பு உயிரோட்டம் மிக்கதாக இருப்பதால் தான் ரூ.600/- விலையுள்ள 556பக்கங்கள் கொண்ட மின்னங்காடி பதிப்பக வெளியீடான இப்புத்தகம் இரு ஆண்டுகளில் நான்குமுறை பதிப்பிக்கப்பட்டுள்ளது.



## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

## எம்.ஜே.விக்டர்.

பிறப்பு: 9.2.1942

இறப்பு: 10.11.2023

பொன்னுடல் மண்ணுக்கு!<br>
புகழுடன் விண்ணுக்கு!<br>
கண்ணீரோ கண்ணுக்கு!<br>
உங்கள் நினைவுகளே எமக்கு....

அழியா நினைவுகளுடன்...<br>
மனைவி, மக்கள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்..

# தமிழக வரலாற்றில் எழுச்சியும் வீழ்ச்சியும்

*10.முதல் இராச ராச சோழன்(கிபி.985-1014:*

**தொகுப்பு:கீழக்கடை ந.ஆ.அ.மா.ஜெயபாஸ்கரன். து.அருணாசலபுரம்.**

10.இனி இராச ராச சோழன் தன் திக்கு விஜயத்தில் பாண்டி நாட்டைக் கைப்பற்றிப் பிறகு கொல்லத்திற்குச் சென்று, அங்கு போர் புரிந்து, அதனைக் கைக் கொள்வனாயின் கொல்லம் என்பது இந்நாளில் கேரளா இராச்சியத்திற்குள் அமைந்துள்ள சிறு நாடாகும். அதனையும் அதனைச் சார்ந்த கொடுங்கோளூரையும், இவன் வென்றான். பிறகு இராசராசசோழனது படை குடமலை நாட்டைத் தாக்கிற்று. அந்நாடு இக்காலத்தில் குடகு என்று வழங்கும் நாடேயாம். அதன் பின்னர் குடகு நாட்டிற்கு பக்கத்திலுள்ள கங்க பாடியும், நுளம்ப பாடியும், ராசராசன் படைகளால் தாக்கப் பெற்றன. கங்கபாடி என்பது மைசூர் இராச்சியத்தின் தென்பகுதியும், சேலம் ஜில்லாவின் வடபகுதியும் தன்னகத்துக் கொண்ட கங்க நாடாகும். அதன் தலைநகர் தழைக்காடு என்பது அந்நாட்டைக் குவளாலபுர பரமேசுவரர்களாக மேலைக்கங்கர் ஆண்டு வந்தனர். நுளம்பபாடி என்பது மைசூர் இராச்சியத்தின் கீழ்ப் பகுதியையும், பல்லாரி ஜில்லாவையும் தன்பாற்கொண்ட நாடாகும். பல்லவருள் ஒரு கிளையினரான நுளம்பர்கள் அதனை ஆண்டு வந்தனர். இராசராச சோழனது படையெழுச்சியில் கங்கபாடியும், நுளம்பவாடியும் கைப்பற்றப்பட்டன. அப்படையெடுப்பின் இறுதியில் மைசூர் ஜில்லாவைத் தன்னகத்தே கொண்ட தடிகை பாடியும், இராசராசசோழனுக்கு உரியதாயிற்று. இராஷ்டிர கூடர்கள் வலிமை குன்றிக் கிடந்தமையாலும், கங்கரையும் நுளம்பரையும் ஆதரித்து உதவி புரிவார் எவரும் இல்லாமையாலும், இராசராசன் கங்கபாடி நுளம்பாடி, தடிகைபாடி என்னும் நாடுகளை எளிதில் கைப்பற்றிக் கொண்டான். மைசூர் இராச்சியத்தில் கி.பி.991ஆம் ஆண்டில் வரையப்பெற்ற கல்வெட்டொன்று உள்ளது. சோழர் படைகட்குத் தலைமை வகித்து அப்போர்களை நடத்தியவன் இராசேந்திர சோழனேயாவான். மும்முடி சோழன் பெற்ற களிறு மலையும், கொண்கானம், துளுவம் முதலான நாடுகளை வென்று கைப்பற்றிய கையோடு அவ்வரசகுமாரன் இளமையில் கங்க மண்டலத்திற்கும் வேங்கி மண்டலத்திற்கும் முதன்மை படைத்தளபதியாக, மாதண்ட நாயகனாக இருந்தான் அன்றியும், தன் தந்தையால் அளிக்கப்பெற் பஞ்சவன் மாராயன் என்ற பட்டமும் பெற்றிருந்தான். இராச ராச சோழனால் கைப்பற்றப் பட்ட நாடுகளுள்ஈழமும் ஒன்று பண்டைக்காலம் முதல் ஈழ மண்டலத்தின் தலைநகராக விளங்கிய அநுராதபுரம் போரில் சோழரால் அழிக்கப்பட்டமையால், அம்மண்டலத்தில் நடுவனுள்ள பொலன்னருவா என்னும் நகரம் சனநாத மங்கலம் என்று பெயரிடப்பெற்றுச் சோழர்க்கு தலைநகராமாக வைத்துக் கொள்ளப்பட்டது. பிற்காலத்திலிருந்த சிங்கள வேந்தனாகிய முதல் விசயவாகு என்பவன் அநுராதபுரத்தில் முடிசூட்டப்பெற்றவனாயினும், அவன் தலைநகரமாகக் கொண்டு அரசாண்ட நகரம் பொலன்னருவா என்பதேயாம்.

மேலைச் சளுக்கிய மன்னனாகிய இரண்டாம் தைலபன் இறந்த பின்னர் அவன் மகன் சத்தியாசிரயன் என்பவன் இரட்டைபாடி ஏழரை இலக்கத்திற்கு அரசனானான். தார்வார் ஜில்லா ஹொட்டூரில் கி.பி.1007ஆம் ஆண்டு கல்வெட்டில் இராசராச சோழன் ஆட்சிக்காலத்தில் இவன் மகன் இராசேந்திரன் மேலைச் சாளுக்கிய நாட்டின் மேல் படையெடுத்துச் சென்றுவென்று வந்தது உறுதியாகிறது. - தொடரும்.......


# ஆர்.சித்தர்ராஜ் நாடார்
## குட்வில் ரியல் எஸ்டேட்
136, ஆற்காடு ரோடு, வளசரவாக்கம்,
சென்னை-87. செல்:9444083769



R.பிரகாஷ் நாடார் போன்:22201348, 9884301348, 9444273385



**K.M.DIESEL & ELECTRICAL CENTRE**

All Types of CRDI, EDC, Pumps, Nozzle Service & Auto Electrical, Turbo Service
Bosch: Battery, D Filter, Oil, Heater Plug, Electrial Spares available,



**20, 2nd Street, Kannigapuram, Velachery Main Road, Guindy, Chennai-32. E-mail:kmd0ecenre @gmail.com**

ஸ்ரீ கருமாரியம்மன் துணை
செல்:80157 47069, 9444273385.

## சிவமணி ஆட்டோபார்ஸ்
## SIVAMANI AUTO PARTS

Specialist in:Tata, Maruthi, Mahindra, Toyota, Force
No:20/1, 2nd Street, Kannaigapuram, Velachery Main Road, Guindy, Chennai-32.



கலைமாமணி விருது பெற்ற திரு.தாமரை செந்தூர்பாண்டி எழுதும் சமூக தொடர்கதை.

# நிலவுக்குத் தென்றல் பகையானால்!

கலைமாமணி தாமரைசெந்தூர்பாண்டி, செல்:8838477377.



31.நினைவுகளை நெஞ்சு சுமந்து பழகிவிட்டால் பிறகு நினைப்பது மட்டுமே சுகம் என்றாகிவிடக்கூடாது என்ற கணிப்பில் சிந்தனையை உதறிக்கொண்டு வகுப்பறைக்குள் பாடம் நடத்துவதில் மூழ்கினாள்.

பள்ளி முடிந்ததும் பள்ளிக் கூடத்தைவிட்டு வெளியேறி சாவித்திரி நேராக எம்.டி.யின் வீட்டிற்குப் போனாள்.

வீட்டுக்கதவு மூடிக்கிடந்தது. அழைப்புமணிப் பொத்தானை அழுத்தினாள்.

ம்கூம்! திறக்கவில்லை.

மணியைப் பார்த்தாள்.

ஓ.... இனிமேல்தான் அலுவலகம் விட்டே அவர் புறப்படுவார்..!

மனதிற்குள் சிரிப்பு வந்தது. அந்த அலுவலகத்தில் அத்தனை நாள் வேலை பார்த்த நமக்கு அவர் இப்பொழுது வந்திருக்கமாட்டார் என்று கூட தோன்றாமல்போனது ஏன் என்று நினைத்தபடியே போர்டிகோவின் முகப்புத் திண்டில் அமர்ந்து கொண்டாள்.

ஒரு மணி நேரம் காத்திருந்த பின் எம்.டி.யின் கார் அங்கு வந்து நின்றது.

காரைவிட்டு இறங்கியதும் சாவித்திரியைப் பார்த்தவர் ஆர்வத்தோடு கையசைத்தபடியே அவளருகில் வந்தார்.

“என்ன மிஸஸ் சாவித்திரி%.. வந்து ரொம்ப நேரம் ஆகிவிட்டதோ...?

“இல்லை. ஒருமணி நேரம் தானாகிறது...

சிரித்தார் அவர்.

“உங்களை அதிகநேரம் காக்க வைத்திருக்கிறேன். ஸாரி...” சொல்லிக்கொண்டே கதவைத் திறந்தார்.

“வாருங்கள். உள்ளே வாருங்கள்...” ஒரு அமைதி மிகுந்த அன்போடு அழைத்தார். உள்ளே போனாள்.

“உட்கார்ந்திருங்கள்.. ஒரு ஐந்து நிமிடங்களில் வந்து விடுகிறேன்...”

உள்ளே போய் ஆடை மாற்றி, முகம் கழுவி.... மெல்லிதாய்த் திருநீறு பூசிக்கொண்டு வந்தவர், அந்த நீண்ட சதுர ஹாலில் அர்த்தம் நிறைந்த புன்னகைகளை அள்ளிவீசிக் கொண்டிருக்கும் ஆன்மீகச் சீலர்களையும், ஆஞ்சநேயரையும் ஆழ்ந்த நோக்கில் மனம் முழுவதும் நிரப்பிக்கொள்வது போல் ஒருமுறை வரிசையாய் வந்து நின்று கரம் குவித்தார்.

“ம்ம்ம்.........அப்புறம்...? என்று கேட்டபடியே சாவித்திரிக்கு எதிரேயுள்ள சோபாவிலமர்ந்தார்.

“நீங்கள் களைப்பாக இருக்கிறீர்களே மிஸஸ் சாவித்திரி.... கொஞ்சம் முகம் கழுவி ரிலாக்ஸ் பண்ணிக் கொள்ளக்கூடாதா...?

இல்லை.. வேண்டாம்..”

ஒன்றும் வித்தியாசமாய் நினைக்காதீர்கள். போங்கள். போய் முகம் கழுவிக் கொள்ளுங்கள்...”

இல்லை வேண்டாம்.

இன்னும் உங்களுக்கு இந்த வீடு அந்நியமாய்த் தோன்றுகிறது... இல்லையா...? “ஓ...நோ....! நான் முகம் கழுவிக்கொள்கிறேன்.. எழுந்தாள்.

பாத்ரூம் எங்கிருக்கிறது..

“அதோ..அங்கே...” காட்டினார்.

எழுந்து போனாள்.

பாத்ரூம் மிகப் பெரியதாய் சுத்தமாயிருந்தது.

முகத்தில் நீரை அள்ளித் தெளித்துத் தெளித்து அழுந்த துடைத்தபோது புதிதாய் ஒரு தெம்பு பிறப்பது போலவே தோன்றியது.

முகத்தைத் துடைப்பதகுத் துணியைத் தேடினாள். ஹாங்கரில் புதிதாய் ஒரு துவாலை தொங்கிக் கொண்டிருந்தது. அதைத் தொடாமல் தன் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு வெளிப்பட்டவள் முன் எம்.டி.நின்று கொண்டிருந்தார். அவர் கையில் இருந்ததைப் பார்த்து ஆச்சரியத்தால் அப்படியே நின்றுவிட்டாள் சாவித்திரி.

32.தன் எதிரே நிற்கும் எம்.டி.யின் கையிலிருந்த பொருட்களை மீண்டும் ஒருமுறை அதிர்ச்சியுடன் பார்த்தாள் சாவித்திரி.

ஒரு கையில் துவாலைத்துண்டு. இன்னொரு கையில் குங்குமச்சிமிழ்.

சார்.....இது....”

முகம் துடைத்துக் கொள்ளுங்கள். துவாலையை நீட்டினார்.

துடைத்துவிட்டேனே.

எப்படி..

சேலைத்தலைப்பு எதற்கு? துடைத்துக்கொண்டேன்..”

சரி.. குங்குமம் வைத்துக் கொள்ளுங்கள்...” குங்குமச் சிமிழை நீட்டினார்.

“பெண்களில்லாத வீட்டில் குங்குமம் மட்டும் எப்படி...

“அம்மாவின் குங்குமச்சிமிழ் இது. அம்மாவின் நினைவாக இதில் எப்பொழுதும் குங்குமம் நிரப்பி வைத்திருப்பேன்...ம்ம்... எடுத்துக் கொள்ளுங்கள் சாவித்திரி..”நீட்டினார்.

எடுத்துக்கொள்வதா வேண்டாமா......?

தயங்கினாள்.

“சுமங்கலிகள் நெற்றிக்கு இட்டுக்கொள்ளாமல் குளியலறை விட்டுக்கூட வெளிப்படலாகாது என்ற அம்மா எப்பொழுதும் சொல்வாள்... எடுத்து நெற்றிக்கு இட்டுக் கொள்ளுங்கள்..

இந்தக் குங்குமத்திற்கும், இதை அவர் தருவதற்கும் என்ன அர்த்தம்...? சிந்தனையுடன் தயக்கம் காட்டினாள்.

“ஓ! இதற்குக்கூட அர்த்தங்கள் கற்பித்துக் கொள்வீர்களோ...? அப்படியானால் உங்கள் இஷ்டம்! “குங்குமச் சிமிழுடன் திரும்பினார்.

“சார்... அதைக் கொடுங்கள்...”

நின்று திரும்பினார்.

“தாருங்கள்.” விரல் நுனியுடன் விரல்நுனி தொடாமல் சிமிழை வாங்கிக் கொண்டாள்.

“நெற்றிக்கு இட்டுக்கொண்டு, அதோ... அந்த ஸ்டாண்டில் வைத்துவிடுங்கள்.” அங்கிருந்து திரும்பிப் பார்க்காமல் நடந்து முன் ஹாலுக்கு போனார் எம்.டி.

குளியலறைக்குள் சென்று கண்ணாடி முன் முகம் காட்டி நின்ற நெற்றிக்கு இட்டுக் கொண்டாள்.

நெற்றிக்கு இட்டுக்கொள்ளும் போது மனத்திரையில் குரூரமாய் ரகுவரன் வந்து நின்றான்.

“அடேய்... அடேய்... அற்பப் பதரே... உன்னை நினைத்து நான் வகிட்டிலிட்ட குங்குமம் கலையும் முன்பே என் சிறகை ஒடிக்க முனைந்தாயே... இப்போதுகூட நான் குங்குமம் இடத்தான் செய்கின்றேன். ஆனால் இந்தக் குங்குமச் சிவப்பு என் நெற்றியில் இருக்கும் போதெல்லாம் உன் இருதய ரத்தத்தை அள்ளி அள்ளி நெற்றியில் வைப்பது போலத்தானடா நினைவு வருகிறது..! நீ என்றாவது ஒருநாள் ரத்தம் கக்குவாய்... நெஞ்சில் உனக்கு ரத்தம் குபுக்கெனக் கொட்டி வழியும்...!

அப்போது தானடா என் நெற்றியிலிடுவது ரத்தம் என்ற எண்ணம் என்னை விட்டுப் போகும்!” மனதிற்குள் வக்கிரமாய் வன்மித்துக் கொண்ட போது தன்னை மீறி தன் கீழுதட்டைப் பற்களால் அழுத்திக் கடித்த இடம் சற்றே தடித்து வீங்கிப் போனது.

கண்ணாடியில் முகம் பார்த்தவள் உதடு வீங்கிய

இடத்தில் விரல் நுனியால் நீவித்தேய்த்துக்கொண்டு மீடிய குங்குமச் சிமிழுடன் வெளிப்பட்டாள். எதிரே மாலை சூடிய புகைப்படத்தடியில், சுவரில் மாட்டப்பட்டிருந்த தாங்கியில் கொண்டுபோய்க் குங்குமச் சிமிழை வைத்துவிட்டுத் தலை நிமிர்ந்தபோது, படத்தில் லட்சுமி தேவியே பிரதட்சணமாகியது போன்ற தேஜசுடன் புன்னகைத்த அம்மையாரைப் பார்த்ததும் பயம் கலந்த மரியாதையுடன் கரம் குவித்தாள்.

இவர்தான் எம்.டி.யின் அம்மாவாக இருக்க முடியும்!

அப்பா...!

எத்தனை விசாலமான நெற்றி...?! அந்த சிவந்த நெற்றியில் சற்றுமுன்பே இட்டது போன்ற குங்குமத்தின் தகிப்பு எப்படி வந்தது...?

வண்ணப்படம் என்றாலும் இத்தனை தத்ரூபமாய்... ஜீவனுள்ளதாய் அந்த அம்மையாருக்கு மட்டும் எப்படி குங்குமம் ஒட்டிக் கொண்டது...?

வியப்புடன் பார்த்துக் கொண்டே நின்றிருந்தவளருகே நிழலாட்டம் தென்பட்டது. திரும்பினாள். எம்.டி. என்ன சாவித்திரி அம்மாவின் படத்தை அப்படி முறைக்கிறீர்கள்?

"இவர் தான் உங்கள் அம்மாவா...?"

"ஆமம், எப்படி கண்டுபிடித்தீர்கள்?"

"இதைக் கண்டுபிடிப்பதற்கு யாருக்குத்தான் தெரியாது..?

எப்படி..?

"வாய்க்கு வாய் அம்மா, அம்மா என்கிறீர்கள் என்பது ஒன்று. பூஜைக்குரிய இந்த அம்மாவின் முகச்சாயலில் நீங்கள் ஸ்படிகமாய்த் தெரிகிறீர்கள் என்பது மற்றொன்று...

"குட் சரியாகச் சொன்னீர்கள்!" சிலாகித்தார். அவர் பார்வையும், அந்தப்படத்தில் சுர்ரென நொடிப்போதில் மூழ்கிப்போய் கசியத்துவங்கியது.

ஓ..!

இவருக்குள் இவரின் தாயே சதாசர்வமும் நினைவு நதியாய்... அலைகளாய் பரவி ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்...! அந்த அலைகளுக்கு அடியில்... ஆழத்தில ஏதோ ஒரு துன்பப் பாறை அமர்ந்து கொண்டு சுழிப்பை ஏற்படுத்திக் கொண்டேதானிருக்கிறது...

சிந்தனையை மீறி வாய் வார்த்தை முந்திக் கொண்டது.

"சார்..."

என்ன சாவித்திரி..."

"உங்கள் சொந்த வாழ்க்கை சம்பந்தமாய் என் மனம் கேட்கத் துடிக்கும் ஒரு விசயத்தை நான் உங்களிடம் கேட்டால் அது வரம்பு மீறின செயல் என நினைப்பீர்களோ?.

"ஓ... நோ....நோ...! மனதில் தோன்றினால் அதை மறைத்து தானும் வருந்தி, தன் மனதையும் வருத்துவதுதான் தவறு தைரியமாகக் கேளுங்கள்." இதமாய்ப் புன்னகைத்தார்.

"உங்கள் அம்மா சாகும்போது கூட மஞ்சள் குங்குமம் குலையாதவராய்த்தான் மறைந்தார்களா?"

"ஆமாம், ஏன் அப்படிக் கேட்கின்றீர்கள்...?"

"அப்படி அவர்கள் சுமங்கலியாகவே இறந்திருந்தால் உங்கள் அப்பா...?"


# வாழ்நாள் பணியாளர் தேவை

# எம்.பச்சைக்கனி நாடார்

**எண்:32/14, அறிஞர் அண்ணா நகர், 8வது தெரு, துரைப்பாக்கம், சென்னை-96.**

**மேற்படி முகவரியில் வசிக்கும் மனைவியை இழந்து சொந்தவீட்டில் தனியாக வசிக்கும் பச்சைக்கனி நாடார் அவர்களுக்கு வயது-63, அவர் வாழும் காலம் வரை அவருடன் இருந்து அவர்களுக்கான அனைத்து பணிகளையும் செய்ய ஒரு பெண் தேவை. 5ஆம் வகுப்புக்கு மேல் படித்த 48வயதுக்குள் தனியாக வசிக்கும் பெண் தேவை. அவர்களுக்கான சம்பளம் தினசரி அவர்கள் வங்கிக்கணக்கில் செலுத்தப்படும். இந்து, கிறிஸ்தவ நாடார் பெண் எதுவானாலும் சம்மதம் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்:80562 75226, இப்படிக்கு எம்.பச்சக்கனி நாடார்,**

**1வருடசம்பளம்-2,50,000. 2ஆம் வருட சம்பளம் 3,00,000. 3ஆம் வருட சம்பளம்-3,50,000**

# வெற்றிப்படிக்கட்டு

வசந்த் & கோ H.வசந்தகுமார்M.A., Ex.MP (Member of Parliament)

**92.எளிமையும் வலிமையே.......**



ஆடம்பரம், பரபரப்பு., பிரம்மாண்டம் இவற்றிற்கு இருக்கும் மதிப்பு மரியாதையை விட. எளிமைக்கு அதிக மதிப்பு மரியாதை உண்டு. எளிமையான இடத்திற்கு எளிமையாகப் போனால் "பாரப்பா எவ்வளவு பெரிய ஆளு எவ்வளவு எளிமையாக வந்திருக்கார்" என்று பெருமையாகப் பேசுவார்கள். இதுபோன்ற அணுகுமுறைகள் மற்றவர்கள் மனதில் ஒரு மதிப்பையும் மரியாதையும் ஏற்படுத்தும், மனப்பூர்வமான நெருக்கத்தை ஏற்படுத்தும்.

இந்த எளிமை என்ற வார்த்தைக்கு உருவகம் நம்ம பெருந்தலைவர் காமராஜர் தான். காமராஜர் அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த பொழுது ஜெய்ப்பூரில் ஒரு மாநாடு நடத்தினார்கள். அங்கே உள்ள பெரும்பான்மையான மக்களுக்கு இந்தி மட்டும் தான் தெரியும். மேடையில் பேச வந்தவர்கள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் பேச ஆரம்பிப்பித்தார்கள். உடனே கூட்டத்தில் சலசலப்பு மக்கள் "பைட்டோ பைட்டோ இந்தி மே போலோ" என்று கூச்சல் போட்டுப் பேசவிடாமல் உட்கார வைத்தார்கள். இதைப்பார்த்துவிட்டு பெருந்தலைவருக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. ஏன்னா அப்பொழுது அவருக்குத் தமிழைத்தவிர ஆங்கிலம் கூடத் தெரியாது. அவர் முறை வந்தது.

மேடையில் ஏறி தமிழ் தான் எனக்குத் தெரியும் என்று சுருக்கமாக இரண்டு வார்த்தை பேசிவிட்டு உட்காரப்போனார். அப்பொழுது அந்த மக்கள் "இன்னும் பேசுங்கள், தமிழ்லேயே பேசுங்கள் பரவாயில்லை" என்று இந்தியில் கத்த ஆரம்பித்தார்கள். தமிழ் மே போலோ என்று அவர்கள் சொன்னதும், காமராஜருக்குக் குழப்பமாகிவிட்டது. அப்பொழுது கூட்டத்தில் இருந்த ஒருத்தர் மக்களிடம் இந்தியில் அதென்ன? அவர் மட்டும் பேசலாம் என்று சொல்கிறீர்களே? என்று கேட்டார் அதற்கு அந்த ஊர் மக்கள் காமராஜ் ஜி எங்களைப் போலமிகவும் எளிமையாக இருக்கிறார் அவரால் எங்களுக்கு நன்மை கிடைக்கும் என்று தோணுது. அவர்கள் எங்கள் கறுப்பு காந்தி என்று புகழ ஆரம்பித்துவிட்டார்கள்.

காமராஜரின் எளிமையும், அமைதியும் மொழி புரியாத ஊரில் கூட மரியாதையையும் மதிப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தன. மக்கள் சேவையில் இடம்பிடிக்க எளிமையான அணுகுமுறைகள் தான் ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தும். அதுதான் வெற்றிக்கான வழிமுறை.




# குழந்தைகள் தினம் பற்றி ஒரு குழந்தையின் பகிர்வு!

எழுத்தாக்கம்- திருமதி.லீலாஸ்டீபன், மும்பை-78, செல்:022-40142398



என் பெயர் பிரியா. நான் ஐந்தாம் வகுப்புப் படிக்கிறேன். எனக்கு நேரு மாமாவை மிகவும் பிடிக்கும். நான் அவரைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டுள்ளேன். நவம்பர் மாதம் 14ம் தேதி இவரது பிறந்தநாள். எனவே இன்று அவரைப் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

நம் பாரத நாடு ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டிருந்த போது விடுதலைக்காக உழைத்தத் தலைவர்கள் அநேகர் அவர்களுள் நேருவும் ஒருவர் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் இவரே. குழந்தைகள் மீது இவர் மிக அன்புடையவர். எனவே இவரது பிறந்த நாள் ஆண்டுதோறும் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிது. குழந்தைகள் இவரை நேருமாமா எனப் பாசத்துடன் அழைக்கின்றனர் இவரது அங்கியில் ரோஜா மலரை அணிந்திருப்பார். இதை வைத்தே குழந்தைகள் கூட இவரை அடையாளம் காட்டிவிடும். ரோஜாமலரை ஒரு சிறுமி இவருக்கு அன்புடன் அளித்தாகக் கூறுவார்.

ஜவஹர்லால் நேரு அவர்கள் 14.11.1889ஆம் ஆண்டு உத்திரப் பிரதேசத்திலுள்ள அலஹாபாத் இன்றைய பிரயாக்ராஜ் என்னுமிடத்தில் பிறந்தார். மோத்திலால் நேருவும், சொரூபராணி அம்மையாரும் இவரது பெற்றோராவர். இவர் தனது 15ஆம் வயதிலேயே இங்கிலாந்து சென்று “கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றார். 1916 கமலாகவுல் அம்மையாரை திருமணம் செய்தார். மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் இவரது புதல்வி ஆவாள். ஐ.நா.சபையில் அமர்ந்த முதல் பெண்மணி விஜயலட்சுமி பண்டித் இவரது சகோதரி ஆவார். நாட்டுப் பணியில் இவரது குடும்பம் பெயர் பெற்றது. மகாத்மா காந்தியின் விடுதலைப் போரில் நேருவும் பங்கேற்றார். சுமார் ஒன்பது ஆண்டுகள் சிறையில் இருந்துள்ளார். அச்சமயம் பல புத்தகங்களை எழுதியுள்ளார். அவற்றுள் The Discovery of India” என்ற நூல் இந்திய வரலாற்றுச் சிறப்பைப் பெருமையாகக் கூறும் சிறந்த நூலாகும்.

இந்தியா 15.8.1947ல் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலைப் பெற்றது. அன்று முதல் 1964வரை அவரது மறைவு வரை பதினாறு ஆண்டுகள் நாட்டின் பிரதமராக அருந்தொண்டாற்றினார். தனது ஆட்சி காலத்தில் கல்வி, தொழில், அறிவியல், பெண் மலர்ச்சி இவற்றிற்காக அரும் பணியாற்றினார். இவரது தொலை நோக்குப் பார்வையே இஸ்ரோ வெற்றிக்குக் காரணமாய் அமைந்தது. சிறுவர்களுக்காகவே The Children Film Society of India வை ஏற்படுத்தினார் இன்றைய குழந்தைகளே வருங்காலப் பாரதத்தைத் தீர்மானிப்பவர்கள் எனவே அவர்கள் நல்ல முறையில் வளர்க்கப்படவேண்டும் என விரும்பினார் சீர்த்திருத்தவாதியான நேரு “பாரத ரத்னா” விருதுப் பெற்றுள்ளார்.

நாட்டுமக்களும் நேரு மீது மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தனர்.. எனவே தான் தம் வாரீசுகளுக்கு நேரு பெயரைச் சூட்டுகின்றனர். மேலும் கல்வி, தொழில் நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள், விளையாட்டுத்திடல்கள், ஊர்கள், தெருக்களுக்கு நேருவின் பெயர் வைக்கப்படுகிறது. மும்பையில் உள்ள நேரு கோளரங்கமும், சைன்ஸ் சென்ரும் பார்க்கத் தகுந்த அறிவியல் சிறப்பு வாய்ந்தவை. சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கம் பிரசித்திப் பெற்றது. நேருவின் மறைவுக்குப்பின் அவரது ஆசைப்படி நாடுமுழுவதும் உள்ள விளைநிலங்களில் அவரது அஸ்தி தூவப்பட்டது.

பாடசாலைகளில் குழந்தைகள் தினம் சிறப்பாகக் கொண்டாடப்படும். ஆசிரியர் மாணவர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் நேருவைப் பற்றிச் சிறப்புரையாற்றுவார்கள். ஆடல், பாடல் போன்றக் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். சிறுவர்கள் நேருவைப் போல் மாறுவேடம் பூண்டு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறுவார்கள். இனிப்பு வழங்கலுடன் விழா நிறைவடையும்.

சிறப்பு வாய்ந்த தேசத் தலைவர் நேரு பற்றி உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இவரைப் போல் நாட்டு விடுதலைக்கும், வளர்ச்சிக்கும் பாடுபட்ட மற்றத் தலைவர்களையும் மறவாது நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். இன்றைய நமது சேதச் தலைவர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் செலுத்துவது நமது கடமையாகும். அவர்கள் செய்யும் அனைத்து நல்ல காரியங்களுக்கும் ஒத்துழைப்பு தருவது மக்களின் தலையாயக் கடமையாகும். எனது கட்டுரையைப்படித்த உங்கள் அனைவர்க்கும் நன்றி கூறுகிறேன்.

அன்புடன் மாணவி பிரியா..........




கீழ ஈரால் அருள்மிகு காமாட்சி அம்மன் துணை

எம்.எஸ்.முத்துவேல் நாடார்,

போன்:9443742889. 7708701159.

சரவணன் ரியல் ஏஜென்சிஸ்

காமாட்சி ஸ்டோர்ஸ்

தலைவர் மாமல்லபுரம் வட்டார நாடார் சங்கம்

நிலம் வாங்க விற்க லேஅவுட் புரோமோட்டர் எண்:118/1, டி.கே.எம்.ரோடு, மாமல்லபுரம், பின்கோடு-603104.



## தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!! Aachi

## தொழில் மேதை.ஏ.டி.பத்மசிங் ஐசக் வெற்றிப் படிகள்

**19.ஆச்சி ஒரு ஆரோக்கிய பல்கலைக்கழகம்!**

பிரியாணி மசாலாவுக்காக வறுக்கப்படும் 10விதமான பொருட்களையும் மிகத் துல்லியமான அளவில், சரியான விகிதத்தில் கலந்தால்தான் முழுமையான சுவையான பிரியாணி மசாலா கிடைக்கும். அதுபோல் எட்டுவிதமான பொருட்களை மிகத் துல்லியமான அளவில் சரியான விகிதத்தில் கலந்தால்தான் முழுமையான சுவையான சாம்பார் மசாலா கிடைக்கும்.

பிரியாணி மசாலாவுக்கு, சாம்பார் பொடிக்கும் எந்த அளவில் எத்தனை சதவிகிதத்தில் எது எதை கலக்க வேண்டும் என்ற சூட்சுமத்தில்தான் மசாலா நிறுவனத்தின் வெற்றி அமைந்திருக்கிறது. அதனால் பேட்சிங் பிரிவு பரம ரகசியம் நிறைந்ததாக இருக்கிறது. அந்த பிரிவில் 25க்கு மேற்பட்டவர்கள் பணிபுரிந்ததாலும் அந்த ரகசியத்தை காப்பாற்றும் முக்கியமான பொறுப்பு இரண்டு அம்மாக்கள் கைவசம் இருக்கிறது. அந்த அம்மாக்கள் இருவரையும் இயக்குவது தெல்மா ஐசக் அவர்கள்! இவர்கள் மூன்று பேரும் தான் சுவை ரகசியத்தை பாதுகாக்கிறார்கள். கோபி மஞ்சூரியன் மசாலாவாக இருந்தாலும், வத்தக் குழம்பு மசாலாவாக இருந்தாலும் அதில் ருசியில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றாலும் தெல்மா ஐசக்தான் அதை முடிவு செய்கிறார். பின்பு அது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவின் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்ட பிறகு அமல்படுத்தப்படுகிறது. பேட்சிங் பிரிவு பெண்மணிகள் இருவரும் அந்த பிரிவின் ரகசியத்தை காப்பாற்றும் முறை என்னை ரொம்பவே வியப்படைய வைத்தது அந்த ரகசியமாகவே இருக்கட்டுமே!



எந்த மசாலாவை, எத்தனை டன் தயாரிக்க வேண்டும் என்பதை முதல் நாளிலே அதற்குரிய துறை திட்டமிட்டுவிடுவதால், அதற்கு தக்கப்படியான உணவு பொருட்களை சுத்தப்படுத்தி, வறுத்து, பேட்சிங் செய்து, தூளாக்கி, பாக்கெட்டுகளில் அடைக்கிறார்கள் வண்ணமயமான பாக்கெட்டுகளில் 8 கிராமம் முதல் 10 கிலோ வரை விதவிதமாக பேக் செய்யப்படுகிறது. எல்லாமே மெஷின்களில் மின்னல் வேகத்தில் தயாராகிறது.



லாரிகளில் மூலப்பொருட்களாக வந்து, தொழிற்சாலையில் விதவிதமான மசாலா பொருட்களாக தயாராகி மீண்டும் லாரிகளில் ஏற்றி, ஆச்சியின் மேல அயனம்பாக்கம் குடோனுக்கு செல்வதுவரை அனைத்தையும் பிரமிப்பாய் பார்த்துவிட்டு ஆச்சியின் அடுத்த தொழிற்சாலைக்கு பயணமானேன்!!!1

கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பூங்காவில் பரந்துவிரிந்த இடத்தில் இயங்குகிறது, ஆச்சியின் மிளகாய்த்தூள், மல்லித்தூள் தயாரிக்கும் தொழிற்சாலை. உள்ளே நுழைந்தால் பச்சைப்பசேல் பூங்கா தென்படுகிறது. அழகான பூஞ்செடிகளில் மலர்கள் பூத்து குலுங்குகின்றன. மரங்கள் வளர்ந்து நிற்கின்றன. கரும்புகள் விளைந்து கண்களை பறிக்கின்றன. தொழிற்பூங்கா என்ற பெயரில் பூங்கா பின்னால் இருந்தாலும், நிஜத்தில் பூங்கா தான் முதலில் அமைந்து, ஆச்சி தொழிற்பேட்டைக்கு அழகு சேர்க்கிறது.

பூங்காவை கடந்து உள்ளே சென்றால், என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும் என்ற வாசகம் அடங்கிய வரிகள் வரவேற்கின்றன.

வழக்கம் போல் கேப், மாஸ்க் அணிந்துகொண்டு, உள்ளே நுழைந்தால், தாங்க முடியவில்லை. மிளகாய் காரநெடி.

தினமும் நூற்றுக்கு மேற்பட்ட லாரிகளில் இருந்து காய்ந்த மிளகாய் ஒருபுறத்தில் இறங்க, மறுபுறத்தில் அது சூப்பராக மிளகாய்த் தூளாக மாறிவிடுகிறது. பின்பு அழகழகாக பேக் செய்யப்பட்டு வெளியே செல்கிறது. உள்ளே செல்லும் முழுமிளகாய், தூளாகி வெளியே வரும் செயலாக்க முறையில் உலகத்திலே அதி நவீனமான இயந்திரங்களும், உற்சாகம் குறையாமல் செயல்படும் ஏராளமான மனிதர்களும் இணைந்து செயல்படுகிறார்கள். ஏராளமான ஆய்வுகளும், எக்கசக்கமான தர மேம்பாட்டு செயல்பாடுகளும் அங்கே நிகழுகின்றன. அவற்றை ஒவ்வொன்றாக சொல்கிறேன்.

- தொடரும்.........




**SVS நாடார் திருமண தகவல் நிலையம்**

**(அரசு அங்கீகாரம் பெற்றது.பதிவுஎண் 1004/2013)**

No.105, நல்ல தம்பி சாலை அண்ணாநகர், பம்மல், சென்னை-75.

எங்களிடம் இந்து சி.எஸ்.ஐ, ஆர்.சி நாடார் ஆண்/பெண் வரன்கள் (டாக்டர், இன்ஜினியர், வியாபாரிகள் மற்றும் உள் நாடு, வெளிநாட்டில் பணிபுரிபவர்களின்) விவரங்கள் நிறைய உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு **தொடர்புகொள்ளவும்.ஆலோசகர்:D.சுந்தர்சிங் நாடார்B.A அரசு இணைச் செயலாளர் (ஓய்வு) செல்:9840093000, 9445093000 9698793000, 8248707424** E.mail:sundarsinghnmb@gmail.com / website: www.svsnadarmatrimony.com

# நாடார் சமூகத்தின் போராட்ட வரலாறு

**8.நாடார்களின் பிரிவுகள்**

**தொகுப்பு ஆசிரியர்:சு.செந்தமிழ்ச்செல்வன்**
**செல்:98412 26856.**



**20.பாண்டிய வம்சா வழியினர்:**

கி.பி.10ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், பாண்டிய நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களாலும், பிற சமூகத்தினரின் கொடுமைகளாலும், அங்கிருந்து இடம் பெயர்ந்து மணல் காடுகளில் குடியேறினர். அவர்கள் குடிபெயர்ந்த நிலங்களைச் சரி செய்து, அந்நிலங்களில் பனை, மா, பலா போன்ற பயன்தரும் மரங்களை வளர்த்தனர். இவர்கள் குமரியிலிருந்து கொல்லங்காடு வரை குடியேறிய இடங்களே, பின்னர் விளைகள், குடியிருப்பு போன்ற பெயர்களில் ஊர்களாக மாறின.

☞இலங்கை அரசு 1834 ஆம் ஆண்டு வெளியிட்ட அரசாங்க விவரச் சுவடியில் நாடார்களில் ஏழு பிரிவினர் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

☞1901ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்குக் குறிப்புகளில் மதுரைப் பகுதியில் உள்ள அரசி வணிகர்கள், துளைக் காதன் என்ற உட்பிரிவில் அழைக்கப்பட்டனர்.

☞கோபிசெட்டிப் பாளையம் தாலுகா மொடச்சூரில் வாழ்கின்ற நாடார்கள் தங்களை “மொடச்சூர் நாடார்” என்று அழைத்துக் கொண்டனர்.

☞”பாண்டியன்” என்ற பெயர் நாடார் சமூகப் பட்டப் பெயரில் ஒன்றாக வழங்கி வருவதை பிரான்சிஸ் என்பவர் 1901இல் மதராஸ் சென்சஸ் ரிப்போர்ட்டிலும், டாக்டர் எட்கர் தட்சன் 1909இல் வெளியிட்ட தென் இந்தியா எதினோகிராபி என்ற புத்தகத்திலும் குறிப்பிட்டு உள்ளார்கள்.

☞நாடார்களின் 37 பிரிவுகளில் 4வது பிரிவு ஈடிகா (கர்நாடகா நாடார்).

-கர்நாடகா ஈடிகாவின் 25 பிரிவுகளில் ஒன்று நாடார்

தெலுங்கு கௌடுகளின் 5 பிரிவுகளில் ஒன்று ஈடிகா. ஆந்திரா துணை முதலமைச்சராக இருந்த திரு.கே.இ.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், ஈடிகா பிரிவை சேர்ந்தவர்.

கி.பி.முதல் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த புனித தோமா, பார்த்தலோ மேயு ஆகிய வேதபோதகர்கள் மூலமாக கிறித்துவம் பரவியது. தமிழ்நாட்டில் கிறித்தவ மதம் தோன்றக் காரணமானவர் இயேசு கிறித்துவின் நேரடிச் சீடர்களுள் ஒருவரான புனித தோமஸ் என்று பெரும்பான்மையான வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். அப்போதைய கிறித்தவம் ஒரு மத நிறுவனமாக மாறியிருக்கவில்லை. எனவே, வெறும் சமயக் கொள்கையைப் பரப்புதல் என்பதோடு அது நின்றுவிட்டது. பத்தாம் நூற்றாண்டுக்குப் பிறகே கிறித்தவ மதமாற்றம், மிஷினரிகள் எனும் சமயநெறி பரப்பும் நிறுவனங்கள் மூலமாக உலகெங்கும் கொண்டு செல்லப்பட்டது.

புனித தோமாஸ் வருகை:

இன்றைய கேரள மாநிலத்தில் வந்திறங்கிய புனித தோமாஸ், கி.பி.52-72 ஆண்டுகளில் கிறித்தவ சமயத்தை அறிவித்து, சென்னை மயிலாப்பூரில் உயிர் நீத்தார் என்னும் வாய்மொழி மரபு கேரள கிறித்தவர்களிடையே ஆழமாக வேரூன்றியுள்ளது. சென்னை சாந்தோம் தேவாலயம் புனித தோமாவின் கல்லறை இருந்ததாகக் கருதப்படும் இடத்தின் மேல் கட்டப்பட்டது.

கி.பி13ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்த மார்க்கோ போலோ போன்ற கிறித்தவப் பயணியர் மயிலாப்பூரில் புனித தோமாவின் கல்லறையைக் கண்ட குறிப்புகளை விட்டுச் சென்றுள்ளார்.

கி.பி.522ஆம் இந்தியாவிற்கு வந்த உலகப் புகழ் பெற்ற சுற்றுப் பயணியான “காஸ்மோஸ்” இண்டிகோ புளூஎஸ்டஸ் என்பவர்” உலகில் கிறித்தவர்கள் வாழும் பகுதிகள்” என்ற நூலில் கல்யாணில் (இப்போது பம்பாய்க்குத் தெற்கே உள்ளது). பாரசீகத்திலிருந்து அனுப்பப்பட்ட ஒரு பிஷப் இருந்தார். - தொடரும்...

ஸ்ரீ முருகன் துணை
ஸ்ரீ ஐந்துவீட்டு சுவாமி துணை

செல்:94980 75679, 9445227158, 9677060358.

தூத்துக்குடி மாவட்டம், செட்டியாபத்து வாக்கியம் பஞ்சாங்க கணிதர் ஜோதிடர் K.M.துரைசாமி நாடார் மகன் ஜோதிடர் C.T.சிவக்கொழுந்து வேல் மகள்

ஸ்ரீ தேவி ஜோதிட நிலையம்

திருவல்லிக்கேணி, சென்னை-5, ஆன்லைன்-லில் ஜாதகம் பார்க்கப்படும், வாட்சஆப்:94980 75679.





# சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம்

**சிவந்தி ஆதித்தனார் என்ற ஆலமரம்.**


க.ப.அறவாணன்
(முன்னாள் துணைவேந்தர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்).


1998-ல் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணைவேந்தராக நான் பொறுப்பேற்றபின் சின்னய்யா சிவந்தி ஆதித்தனார் எனக்குப் பழக்கமானார்கள். அப்போது திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரி முதல்வராக என் நண்பர் பேராசிரியர் மா.பா.குருசாமி இருந்தார்.

அக்காலங்களில் "மனோ ஆய்வரங்கம்" என்ற அமைப்பை பல்கலைக்கழகம் சார்பில் நான்கு இடங்களில் மாதந்தோறும் தொடர்ந்து நடத்தி வந்தோம் திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்செந்தூர், நாகர்கோவில் ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகளில் அந்த ஆய்வு அரங்கம் தொடர்ந்து நடந்து வந்தது.

அந்த அரங்குகளில் கல்லூரி ஆசிரியர்கள் கட்டுரை எழுதி வாசிக்கவேண்டும். விவாதம் நிகழும்.

ஆண்டு முழுதும் வாசிக்கப்பெற்ற கட்டுரைகளை நூலாக வெளியிட முயன்றோம். திருச்செந்தூரில் வாசிக்கப்பெற்ற கட்டுரைகள் சிவந்தியார் உதவியுடன் முதல்வர் மா.பா.குருசாமி முயற்சியால் நூல் வடிவில் வெளிவந்தன.

பல்கலைக்கழகம்:

சின்னைய்யா சிவந்தியார் முயற்சியில் திருச்செந்தூரில் உடலியல் கல்லூரியும், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியும் தோற்றுவிக்கப் பெற்றன. அவை தொடங்கப்படும் போது தொடக்க விழாவில் சின்னைய்யா சிவந்தியாருடன் நானும் கலந்து கொண்டேன்.

ஆதித்தனார் பெயரில் உள்ள கல்லூரிகளை ஒருங்கிணைத்து திருச்செந்தூரில் ஆதித்தனார் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் ஒன்றைத் தொடங்கலாமே என்று அப்போது அவர்களிடம தெரிவித்தேன். நல்ல யோசனை. அதற்குரிய விதிமுறைகள் யாவை? என்று கேட்டார்கள். திருநெல்வேலி திரும்பிய நான் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்திற்குரிய பல்கலைக்கழக நல்கைக் குழு வரையறுத்திருக்கும் சட்ட திட்டங்களை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.


பத்மஸ்ரீ டாக்டர் சிவந்திஆதித்தனார் சாதனைச் சரித்திரம் அ.மா.சாமி.


கல்வி வளாகம்: ஐயா சிவந்தி அவர்களிடம் திருநெல்வேலி சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் தினத்தந்தி பெயரில் ஒரு கட்டிடம் கட்டித்தருமாறு நேரிலும், மடல் வழியிலும் வேண்டிக் கொண்டேன்.

அவர்கள் பெயரில் பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு கட்டிடம் இருக்க வேண்டும் என்று விரும்பியமைக்கு ஒரு தனிக்காரணம் இருக்கிறது. மனோன்மணியம் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவிக்கும்போது சி.பா.ஆதித்தனார் பெயரை அப்பல்கலைக்கழகத்திற்குச் சூட்டவேண்டும் என்ற கருத்துரு இருந்தது. அக்கருத்துரு என் வேண்டுதலில் நிறைவேற வேண்டும் என்று நினைத்தேன்.

என் பதவிக்காலத்தில் (1998-2001) அது நிறைவேறாவிடினும். அதற்குப் பிறகு சிவந்தி ஐயாவால் அக்கோரிக்கை நிறைவேற்றப் பட்டு, அவர்கள் கட்டிய சி.பா. ஆதித்தனார் கல்வி வளாகம் இன்று பல்கலைக்கழக வளாகத்தில் நிமிர்ந்து நிற்கிறது.

மறக்க முடியாது.

நான் சென்னை வரும்போதெல்லாம் நேரம் அமைவதைப் பொறுத்து சின்னய்யாவை நேரி சந்திப்பேன். உரையாடுவேன். அவர் மிக அளவாகப் பேசுகிற பழக்கம் உடையவர். மூன்றாம் மனிதரைப் பற்றிப் பொதுவாகப் பேசமாட்டார். நல்ல பண்புகளை நிறைகுடமாகப் பெற்றிருந்த அவர் சற்றே குறைந்த வயதில் நம்மைவிட்டுப் பிரிந்தது பேரிழப்புதான்.

துணைவேந்தர் பணியிலிருந்து ஓய்வு பெற்று நான் சென்னைக்கு வந்தபின் சிவந்தி ஐயா எனக்குச் செய்த சிறப்பை மறக்கவே முடியாது. நான் எழுதிய தமிழர் அடிமையானது ஏன்? எவ்வாறு? என்ற புத்தகத்திற்கு சிறந்த நூல் பரிசு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினார்கள். ஐயா சி.பா.ஆதித்தனார் பெயரில் உள்ள பரிசைப் பெற்றவன் என்ற மனநிறைவும், மகிழ்வும், பெருமிதமும் இன்றும் எனக்கு இருக்கின்றன. - தொடரும்..........

# கேள்வி? பதிலில்?...... முதியோர் நல மருத்துவம்

பத்மஸ்ரீ டாக்டர்.வி.எஸ்.நடராஜன், மூத்த முதியோர் நல மருத்துவம்.044-26412030.

## காது, மூக்கு, தொண்டை

✱ **கேள்வி:** எனக்கு பல வருடங்களாக புகை பிடிக்கும் பழக்கம் உண்டு. கடந்த ஒரு சில மாதங்களாக எனது குரல் கம்மலாக இருக்கிறது. இது தொண்டையில் ஏற்படும் புற்று நோயினால் இருக்குமா, டாக்டர்?

✱**பதில்:** தொடர்ந்து பேசிக் கொண்டு அல்லது பாடிக் கொண்டு இருப்பது, புகை பிடிப்பது, புகையிலைப் போடுவது, மருந்துகள் (உதாரணம்:பக்கவாதம் மற்றும் மனநோய்களுக்கு கொடுக்கும் மாத்திரைகளின் பக்கவிளைவு), பல் மற்றும் சயினஸ் தொல்லைகள், தொண்டையில் ஏற்படும் நோய்த் தொற்றினால் சயினஸ் தொல்லைகள், தொண்டையில் ஏற்படும் நோய்த் தொற்றினால் தான் பலருக்கு குரல் மாற்றம் ஏற்படுகிறது. குரல் வளையில் ஏற்படும் சாதாரண கட்டி, குரல் வளை மற்றும் தொண்டையில் ஏற்படும் புற்றுநோய், நரம்பு சார்ந்த நோய்கள் -உதாரணம்: குரல் வளை வலிமையிழத்தல். உதறுவாதம், வயிற்றில் இருக்கும் அமிலம் தொண்டைக்குச் செல்லுவது தைராய்டு, குறைவாகச் சுரத்தல் போன்றவையும் இதற்குக் காரணமாகலாம்.

குரலில் மாற்றம் தொடர்ந்து இருப்பின் பொதுநல மருத்துவரையோ, காது, மூக்கு தொண்டை மருத்துவரையோ அணுக வேண்டும். நீங்கள் புகைப்பிடிப்பவராக இருப்பதால் தொண்டையில் ஏற்படும் புற்றுநோய் ஒரு காரணமாக இருக்கலாம்.

## பற்கள்:

✱ **கேள்வி:** எனக்கு அடிக்கடி வாயில் வறட்சி உண்டாகிறது. அதனால் சாப்பாட்டை முழுங்குவதற்கு சரிமமாக உள்ளது. சுகர் ரொம்ப நாளாகவே உண்டு. இன்னும் கண்ட்ரோலுக்கு வரவில்லை. நிறைய பற்கள் விழுந்துவிட்டன. செயற்கைப் பற்கள் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. வாய் வறட்சிக்கு என்ன மருந்து சாப்பிடவேண்டும் டாக்டர்?

✱ **பதில்:** வாயை ஈரப்பதமாக வைத்திருக்க வாயில் தோன்றும் உமிழ்நீர் உதவுகிறது. வாயில் வறட்சி ஏற்பட காரணங்கள்:

- ❖ வாயினால் சுவாசித்தல்
- ❖ பற்கள் இல்லாமல் இருத்தல்
- ❖ நீர் வறட்சி
- ❖ மருந்துகள் (உதாரணம்: அலர்ஜி, மனசோர்வு மற்றும் மனநோய்க்கு கொடுக்கும் மருந்துகள், சிறுநீர் மாத்திரை, புற்று நோய்க்கு கொடுக்கும் கதிர்வீச்சு சிகிச்சை)
- ❖ நீரிழிவு நோய்
- ❖ தைராய்டு தொல்லை

நீரிழிவு நோயினாலும் வாய் வறட்சி ஏற்படலாம். நீர் வறட்சிக்கு காரணமான தேவையற்ற மாத்திரைகளை நிறுத்தவேண்டும், நிறைய திரவங்களை குடிக்க வேண்டும். உங்களுக்கு பற்கள் அதிகம் இல்லாமல் இருப்பதனால், அதனால் வாயில் சுவாசிப்பதனால் வாயில் வறட்சி ஏற்படுகிறது. செயற்கைப் பற்களை அவசியம் பொறுத்திக் கொள்ள வேண்டும். இதனால் வாய் வறட்சி குறைவதோடு முகப் பொலிவும் ஏற்படும். செயற்கை பல்லை பொறுத்தி அதன் பலனை அனுபவித்துப் பாருங்களேன்!

✱ **கேள்வி:** எனது பாட்டிக்கு 70 வயது. பல்வலி என்ற ஈரோட்டில் உள்ள பல் டாக்டரிடம் காண்பித்ததற்கு, பல்லில் சீழ் பிடித்துவிட்டது. பல்லை எடுக்காமலேயே வேர் சிகிச்சை செய்து தக்க குணமளிக்கமுடியும் என்றார். ஒரு மருந்து எழுதி கொடுத்துவிட்டு, சுமார் ஒரு வாரம் கழித்து வரச் சொன்னார். எனக்கு அந்த சிகிச்சைப் பற்றி சற்று விவரமாக கூறினால் எனது பாட்டியை அதற்கு சம்மதிக்க வைக்க முடியும்.

✱ **பதில்:** முன்பெல்லாம் பல் சொத்தை என்றால் அதை அகற்றுவதே சிறந்த சிகிச்சையாக இருந்தது. இப்பொழுது சொத்தையான பல்லை அகற்றாமலேயே தக்க சிகிச்சையளிப்பதுதான் வேர் சிகிச்சை முறையாகும். பற்சிதைவு வேர்களில் நுழைந்து சீழ் பிடித்தால் வலி ஏற்படுத்தும். வேரினுள் கெட்டுப்போன நரம்பினை அகற்றி வேரின் அடிப்பகுதியிலிருந்தே கொப்பி அல்லது சீலர் சிமெண்டால் நிரப்பப்படுகிறது. இதுவே வேர் சிகிச்சையாகும். மிகவும் பழுதடைந்த பற்களைக் கூட வேர் சிகிச்சை செய்து காப்பாற்றலாம். வேர் சிகிச்சை செய்த பற்களுக்கு கட்டாயமாக கொப்பி போடப்பட வேண்டும். தக்க காலத்தில் வேர் சிகிச்சை செய்யவில்லை என்றால் பல்லை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

**தொகுப்பு: - எல்மாமதி..**




# அமிர்தகனி

## திருமண தகவல் நிலையம்



**நாடார் சொந்தங்களுக்கு மட்டும் 9840948727.**

**தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டகளை பிறப்பிடமாக கொண்டு, இங்கு வாழும் அனைத்து வகை நாடார் சமூகத்தினருக்கும் வரன் பார்த்து கொடுக்கப்படும்.**

**மண் பொருத்தம், மனைப்பொருத்தம், மணப்பொருத்தம் இவை மூன்றுமே திருமணத்திற்கு போதுமானது.**

**எண்:5, 3வது தெரு, வள்ளலார் நகர், திருமுல்லைவாயல், சென்னை-600 063.**

நேரம்:புதன், வியாழன், வெள்ளி மாலை 5மணி வரை.

# மானாடும் மானாட்டாரும்: கி.பி.1600 விடியலிலிருந்து-19

டாக்டர் ஆ.தசரதன் 9444169603.



இந்தியன் நாடார் முரசின் கடந்த சில இதழ்களில் மானாட்டில் சான்றோர் குலத்தினர் தொடர்பான ஆவணங்கள் வழியாக அவர்தம் வரலாற்றை ஓரளவு வரையறுத்திருந்தேன்.

அதன் அக்டோபர் இதழில் மானாட்டினரின் சிறப்புகள் சில பதிவு செய்யப்பட்டன. இம் மானாட்டினர் என்போர் யார்? எங்கிருந்து, எப்போது மானாட்டுக்கு வந்தனர். எப்போது, எங்கெல்லாம் வெளியேறிச் சென்றனர்? அவர்களில் என்னவென்ன பிரிவுகள் இருந்தன? இருக்கின்றன? மானாட்டில் அவர்கள் என்ன செய்தனர்? வெளியேறிச் சென்ற இடங்களில் என்னவென்ன செய்தனர், செய்கின்றனர்? போன்ற ஏராளமான கேள்விகளுக்கு விடை சொல்லியாக வேண்டும்.

கி.பி.19ஆம் நூற்றாண்டில் மானாட்டினர் பற்றிப் பதிவு செய்த அந்நிய ஆராய்ச்சியாளர்களில் சிலர் மானாட்டினரில் பட்டயம் பெற்றோர் சிலர் பற்றி எழுதியுள்ளனர், சில வகையறாக்களும் வரையறுக்கப்பட்டிருந்தன. ஆனால் இவை மானாட்டினர் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளக் கூடியனவாக இல்லை. யாரோ சொல்லிக் கேட்டுப் பதிவு செய்ததால் ஏற்பட்ட பின்னடைவு என்றே சொல்ல முடியும்.

கி.பி.1600ஆம் ஆண்டிலிருந்து பெறப்படும் ஆவணங்களிலும் மானாட்டினர் பற்றி முழுமையான பதிவு கிடைக்கவில்லை. மானாட்டினரில் ஏனாதிச் சான்றோர் பற்றிச் சில பதிவுகள் உள்ளன. இதனால் மானாட்டினர் பற்றிய ஆவணங்களை அடையாளங்காணுவது தேவையாகின்றது.

கி.பி.19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாடப் பெற்றதாகக் கிடைக்கும் சான்றோர் குலத்தவரின் திருமணங்களில் பாடப்பெறும் திருமணவாழ்த்துப் பாடலிலிருந்துதான் மானாட்டினர் பெரும்பான்மையோரின் விவரங்கள் தெரியவருகின்றன.

நான் 1984ஆம் ஆண்டில் வலங்கை வாழ்த்து என்ற பெரியல் சிறிய நூல் ஒன்றை, இத்திருமண வாழ்த்தை, வெளியிட்டேன். பின்பு 2006ஆம் ஆண்டு புதிப்பித்துச் சற்றுப் பெரிதாக, வலங்கை வாழ்த்து என்ற க்ஷத்திரிய குலத்தவர் திருமண வாழ்த்து என்ற பெயரில் வெளியிட்டேன். இந்த வாழ்த்துப்பாட்டில்தான் மானாட்டினர் பற்றிய அண்மைக்காலப் பதிவுகள் ஆமைந்துள்ளன. அவற்றை இனிக் காணலாம்.

“பத்திரகாளி புத்திரன் பார்மீதில் கீர்த்தி பெற்றோன், ஏழு கன்னி புதல்வன் ரிஷியுபதேசம் பெற்றோன், வாழ்வு வழங்கவென்று வந்த குலக்கெம்பீரன், தாடாழன் சோழன் தனிச்சோழன் தேசமதில், நாடாண்மை பெற்று நன்மை கிட்டிக் கொண்டவர்கள், பேட்டை தலங்கள் பெரிய பட்டணங்களிலும் திட்டமாய்ச் சரக்கேத்திக் கொண்டு விற்றோன்,

திருச்சினாப் பள்ளி திசை பெற்றயிடங்களெல்லாம் வரிசையாபாரியென்று வந்தகுலக்கெம்பீரன், திட்டமுடன் காவேரி சென்றுடைக்கு முன்னாளில் குடுகுடென்று தலை புரண்டும் கூடை தொடோம் என்றோர்கள்.

ஆழிதனிலிறங்கி அக்கரையில் சென்றவர்கள், ஈழந்திறை கொண்ட இலங்காபுரி வேந்தன், வெள்ளவட்டக் குடையான் வெள்ளானை மேலேறி உள்ளம் சினங்கொண்ட உயர்ந்தகுடிப் பிறந்தோன், அம்புவியில் சோழனிக் காய் அலைகடலைத்தான் கடந்தோன், சம்பரனை வெட்டிச் ரெட்டச் சங்குதனைப் பறித்தோன், சோழகுலம் நாங்களென்று துரைமெய்க்குஞ் சேவகர்கள், வாழைக்கு ரெண்டுகுலை வரக்கண்டவர்கள், பாவாணர் செஞ்சொல் பயிலுந் திருநாட்டில் பூவேந்திர சோழன் புகழுமிகப் பெற்றவர்கள், வளஞ்சேரும் செம்பியர்க்கு வாய்த்த தம்பி நாடாக்கள், இளவரசு தான் கொடுத்தார் இராச்சாக்கள் கோபாலன்,

வாளினால் வெட்டி வகைகண்டு தானிருக்கத் தோளேறிப் பெருமாள் துலங்கப் பேர் பெற்றோர்கள், சந்தனத்தார் மார்பன், சர்வ தானியில் வல்லோர்கள், வந்துதித்த சான்றோர்கள் வாழ்ந்திருக்கு மன்னாளில்....”

இவ்வாறு அந்த வாழ்த்துப் பாடலில் குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றோர் குலத்தினரின் ஒரு பகுதியினர் பற்றிய வரலாற்றுப் பதிவுகளில் அவர்களில் பலர் வியாபாரிகளாகச் சென்றனர் என்றும் அவர்களில் பலரே மானாட்டினர் என்று அடையாளப்படுகிறார்கள் என்றும் தெரியவருகிறது.

இதைக் குறிக்கும் சான்றுவரிகளான பேட்டை தலங்கள் பெரிய பட்டணங்களிலும் திட்டமாய்ச் சரக்கேத்திக் கொண்டு விற்றோன், திருச்சினாப்பள்ளி திசை பெற்றயிடங்களெல்லாம் வரிசையாபாரியென்று வந்தகுலக் கெம்பீரன் என்னும் நான்கு அடிகளே மானாட்டினர் பற்றிய விவரங்களை அடையாளப் படுத்துகின்றன.

இப்பாடல் வரிகள் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வியாபாரிகளாக இருந்த சான்றோர்குலத்தினர் பற்றியதாகும்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பாடப்பெற்றிருந்தாலும் அதற்குப் பல ஆண்டுகள் முன்னரே இவ்வியாபாரிகள் வணிகச் சாத்துகளாக, பொதிமாடுகளில் சரக்குகளை ஏற்றியும் இறக்கியும் வந்து, பின்பு வண்டி மாடுகளில் சென்று தங்கியும் விற்றும் வந்த வரலாற்றை நாம் அறிந்து கொள்வது அவசியமாகும். இந்த வரலாறு கி.பி.1600க்குப் பின்பே அமைந்திருக்க வேண்டும். இதற்கு முன்னோடியாக அமைந்த வரலாற்றை இனிக் காண்போம்.

நெல்லை நெடுமாறன் அவர்களும் செட்டிகுளம் ஆ.கணேசன் அண்ணாச்சி அவர்களும் எழுதி, திண்ணை என்ற இணையத் தளத்தில் வெளியிட்ட கருத்துகளில் சில வருமாறு:

“நாடார் சமூகத்தவருள் சில பிரிவினர் முழு அளவில் வாணிகத்தினைக் கி.பி.11-12ஆம் நூற்றாண்டுகளிலிருந்தே மேற்கொள்ளத்

தொடங்கினர் வணிகக் குழுக்களுக்குப் பாதுகாப்புப் படையினராகச் செயல்பட்ட வலங்கை உய்யக் கொண்டார் பிரிவும் போர் வீரர்கள் மற்றும் முந்நூற்றுவர், எழுநூற்றுவர் என்று எண்ணிக்கை அடிப்படையில் பெயர் பெற்றிருந்த படைப் பிரிவினர் பற்றிக் கி.பி.11ஆம் நூற்றாண்டிலிருந்தே கல்வெட்டுக் குறிப்புகள் கிடைக்கின்றன.

கி.பி.13 ஆம் நூற்றாண்டில் சோழராட்சி முழுமையாக வீழ்ச்சியடைந்து, பாண்டியர் ஆட்சி, கர்நாடக ஒய்சாளர் மேலாதிக்கம் ஆகியவை ஏற்பட்டபோது மேற்குறித்த படைப்பிரிவினருள் பலர் தமது வணிகத் தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டு தாமே வாணிகத்தில் இறங்கினர்.

எடுத்துக்காட்டாகத் திருச்செந்தூர் அருகிலுள்ள அங்கமங்கலம் என்ற ஊர் அங்கைப்போர் எனப்படும் வர்மக் கலையும் களரிப் பயிற்சியும் கலந்த மிக உயரிய போர்க்கலையில் தேர்ச்சிபெற்ற அங்கக் காரர்கள் எனப்பட்ட சான்றோர் சமூகப் போர் வீரர்களுக்காகப் பாண்டியரால் வழங்கப்பட்ட மானிய கிராமமாகும்.

இவ்வூர், அங்கை மங்கலமான வீரபாண்டியன் மடிகை மாநகரம் என கி.பி.13ஆம் நூற்றாண்டுப் பாண்டிய மன்னர்கள் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது. மடிகை என்ற சொல் வணிக முதன்மையுடைய ஊரைக்குறிக்கும்.

அங்க மங்கலம் என்ற இவ்வூரில் புன்செய்ப் பயிர்களான நவதானியங்கள், புளி, கடற்கரையில் காய்ச்சப்பட்ட உப்பு, கருப்புக் கட்டி, வெற்றிலை போன்ற பல்வேறு பொருள்கள் சேமித்து வைக்கப்படும் காவலோடு கூடிய கிடங்குகள் இருந்தன என்பதை மடிகை மாநகரம் என்ற சொல்லாட்சியின் மூலம் நாம் புரிந்துகொள்ளலாம்.

இவற்றுள் உப்புக்கோச் செய்கை என்ற தொடர் கல்வெட்டுகளில் இடம் பெறுவது வழக்கம். உப்பு என்பது முதன்மையான ஒரு பண்டமாகக் கருதப்பட்டதால், உப்பளத் தொழில் என்பது அரசரின் நேரடிக் கண்காணிப்பில் நிகழ்ந்த ஒரு தொழிலாகக் இருந்தது. எனவே வீரபாண்டியன் மடிகை மாநகரத்தில் இருந்த வணிக வீரர்கள் பாண்டிய அரசகுலத்துடன் இரத்த சம்பந்த முடையவர்களே எனத் தெரிகிறது.

இவ்வாறு அவர்கள் பதிவிட்டிருப்பதிலிருந்து மானாட்டினரின் வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்தவை அங்கமங்கல அங்காடியும் பாண்டிய அரசனின் உறவுமுறையுமே ஆகும் என அறிந்து கொள்ளலாம்.

சான்றோர் குலத்தினரின் மகமைப் பேட்டைகளின் தோற்றம் என்பதை இந்தப் பின்னணியில் பார்த்தே வலங்கை வாழ்த்துப்பாடல் இவ்வாறு பாடியுள்ளது.

கி.பி.17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரை நாயக்கர் ஆட்சியின் கெடுபிடிகளால் தமிழ் மூவேந்தர் ஆட்சியின் எச்சமாக ஊசலாடிக் கொண்டிருந்த பிற்காலப் பாண்டியரின் ஆட்சியும் ஓய்ந்து கொண்டிருந்த காலக்கட்டத்தில் சான்றோர் சமூகத்தினர் தம் அடையாளங்களை மீட்டெடுக்கும் முயற்சியாக, தமக்க முன்னோடியாயிருந்த மடிகை மாநகரங்கள் போன்ற வணிகப் பேட்டைகள் மற்றும் வண்டிப்பேட்டைகளை அமைத்துக் கொண்டனர்.

பொதிமாட்டு வணிகத்தில் தொடங்கி வண்டிமாட்டு வணிகத்தின் மூலமாகச் சுதந்திரமான வணிக முயற்சிகளில் ஈடுபட்டுத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டனர்.

கி.பி.17ஆம் நூற்றாண்டிற்கு முன்னாப் பாண்டிய மன்னர்களின் கட்டுப்பாட்டிலிருந்த சிவகாசி, தென்காசி போன்ற ஊர்களுக்கும் இவர்கள் வணிக நிமித்தமாகவும் விசாயம் சார்ந்தும் சென்றுள்ளனர். சிவகாசியில் கி.பி.1668இல் சிவகாசி வியாபாரிகளாலும் விவசாயிகளாலும் மகமையாக புதுப்பித்துக் கட்டப்பெற்ற விசுவநாதசுவாமி கோயிலே இதற்கு சான்றாகும்.

கரிசல்காடுகளில் குடியேறிய சான்றோர்குல வியாபாரிகளும் விவசாயிகளும் ஏனைய கிழக்குச் சீமையில் குடியேறியவர்களும் ஆட்சி அதிகாரங்களிலிருந்து வீழ்ச்சி அடைந்தாலும் தொழிலிலும் வணிகத்திலும் ஈடுபட்டு, நிருவகித்து, விடாமுயற்சி, சுயச்சார்பு அடிப்படையில் உயர்ந்து காட்டினர். -

தொடரும்.......




# ஸ்ரீ சரவணா ஸ்டோர்ஸ்

**சூப்பர் மார்க்கெட்**

**ஈகை வியாபாரிகள் நல சங்கம் வி.சரவணராஜ் தலைவர்**

**செல்9445171819, 044-22253484.**

2/33, அம்பாள் நகர் மெயின் ரோடு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை-32.



# விருதுநகர் இந்து நாடார் வியாபாரிகள் சங்கம் திருமண தகவல் மையம்

**இந்து நாடார்களுக்கு மட்டும்.**(மணமகன்/மணமகள்) செயல்படும் திருமண தகவல் மையம் பதிவு கட்டணம் 200 மட்டும். வேறு எந்தவித கட்டணமும் கிடையாது. மணமகன்/ மணமகள் தேவைப்படுவோர் பதிவு செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்கிறேன். (வசதி குறைவானவர்களுக்கு பதிவுகட்டணம் கிடையாது).

**மா.பட்டாணி நாடார் நினைவு டிரஸ்ட்,** 156,மெயின்பஜார், விருதுநகர், செல்:9486555373, 8610212126.

# பனைமரம்

தொகுப்பு:M.செசிலிஸ்டீபன்
இராஜாவூர், செல்:9486356746

## மரம் வளர்ப்போம் பசுமை நிற பனைமரம் வளர்ப்போம் தமிழக பசுமை பனைமர செழுமையே!!!

**திருவள்ளுவர் எழுதுகோல், எழுத்தாணி, ஏட்டுச்சுவடி அவர் கையில் உலகப்புகழ் திருக்குறள்.**

"தெய்வத்திரு புலவர் நம் திருவள்ளுவர்" வலது கையில் எழுதும் எழுத்தாணி" இடதுகையில் அவர் எழுதிக் கொண்டிருக்கும் "பனை ஓலை" "ஓலைச் சுவடி. ஏடு. "திருக்குறள்,!!!!

காட்டில் பதநீர் குடிப்பவர்கள், கஞ்சி குடிக்க, தோட்ட தொழிலாளர்கள் பச்சை பனை ஓலையில் பட்டை பிடித்து கட்டி பாதி கிண்ணம் வடிவில் வால் குருவி போல் செய்து கஞ்சி சாப்பிடுவார்கள் கஞ்சி குடிப்பார்கள். பனங்கிழங்கு தோண்டும் போது சில பனம் கொட்டைகளின் கிழங்குக்கு இடையில் மண்ணில் அழகான பொறித்த விரால் மீன் போன்று நல்ல உடல் வளத்தோடு வெண்ணெய் நிறத்தில் கொழு கொழுப்பாக முகத்தில் கருமை மரம் நிறத்தில் வாய் வைத்துக் கொண்டு கங்காணம் இருக்கும் அதை எடுத்து வெளியே வீச உடனே காகம் தூக்கிக் கொண்டு பறந்து விடும்.

பனை மரத்தின் தும்பு இவை கயிறு செய்வதற்கு எடுக்கப்படுகிறது. பனை மட்டைகள் பனை பத்தையோடு சில்லாட்டையும் சேர்ந்து பனைமரக் கொண்டையின் அடியில் பற்றி சேர்ந்திருக்கும் பனை வேந்தியர்கள் பனையை பாளை பருவக்காலத்தில் பாளை சீவப் போகும் போது பனை கொண்டை அடியில் உள்ள பத்தைகளை பாளை அரிவாளால் சீவி சுத்தம் செய்வார்கள். அந்த பத்தைகளை வீட்டுக்கு கொண்டு வந்து பனையாளிகளின் குடும்பத்து பெண்கள் தும்பு இடிப்பார்கள் இது இவர்களின் சுய உதவி தொழிலாகும் வீட்டில் இடி உரலை மாற்றி வைத்து அதன்மேல் பத்தையை வைத்து உலக்கையால் இடித்து பக்குவமாக தும்புவரும் வரை இடுத்து சதைத்து தும்பு எடுப்பார்கள் தெருவின் ஒவ்வொரு வீட்டின் முன்னும் தும்பு இடிக்கும் பெண்கள் தும்பு இடிப்பார்கள் பத்தையானது இடித்து சதைத்து பின் ஒரு நிறுத்திவைக்கப்பட்ட சின்ன காலோடு இணைக்கப்பட்ட பலகை கம்பி இடை வெளிவிட்டு நான்கு அல்லது ஐந்து நீண்ட ஆணிகள் இருக்கும் இதில் அடித்து இடித்த பத்தையை போட்டு இழுப்பார்கள்.

**பனம்தும்பு, பனம்கயிறு, பனம்தும்பு ஏற்றுமதி.திரு.அந்தோனிமுத்து நாடார் இராஜாவூர்.**

நான்கு அல்லது ஐந்து நீண்ட ஆணிகள் இருக்கும்

இதில் அடித்து இடித்த பத்தையை போட்டு இழுப்பார்கள். பத்தையின் மேல் சிதழ்கள் ஆணியில் தங்கி விடும். தும்புகள் தெளிவாக வந்துவிடும். இவைகளை சுவர்களின் ஓரங்களில் நிற்க வைத்து காயவைப்பார்கள். ஆகாத தும்புகள் மண் சுவர்கள் மழை நீரால் நனைந்து சரிந்து விழாமல் பாதுகாப்பானாக உபயோகிப்பார்கள். தும்புகளை தும்பு வியாபாரிகள் இரண்டணா நான்கு அணாவுக்கு ஒரு அளவு முறையில் தும்பு வாங்கி செல்வார்கள். இந்த தும்பானது வெளிநாட்டுக்கு அப்போதே ஏற்றுமதியானது. ஆங்கிலேயர் காலத்தில் தும்புகளை கொள்முதல் செய்ய தும்பு ஆபீஸ் வடக்கன்குளத்திலும் இருந்ததை அறிவேன். (தெற்கு தெருவில் தேவசகாயம் வாத்தியார் வீட்டோடு வடக்கு பக்க வீடுகள்) மேலும் ஆரல்வாய் மொழி மலைக்கு தென் அடியில் உள்ள இராஜாவூர் அப்போதைய கேரளா மாநிலம் கீழ் இருந்தபோது ஊரின் பெயர் வாஞ்சி மார்த்தாண்ட நல்லூர் இங்கே அதிகமாக பத்தை இடித்து தும்பு இழுக்கும் பெண்கள் வேலை செய்தார்கள். இவற்றை கொள்முதல் செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்தார்கள். இந்த தும்பு வியாபாரம் செய்தவர் திரு.அந்தோணிமுத்து நாடார் அன்றைய ராஜாவூர் முடுதம் முடுதம் என்றால் ஊர் தலைவர் கேரள வார்த்தைதான் முடுதம். இவர்தான் ஊரில் நீதி வழங்கும் உரிமை உடையவராய் இருந்தார். இவருக்கு தும்புகாரர் என்றும் பண்டாரத்தார் என்றும் ஊர் முடுதம் என்றும் அழைப்பார்கள் கழுத்தில் ஒரு பொட்டணம் போல ஒரு சதை உருண்டை இருந்ததால் அதை பண்டம் வைத்திருக்கிறார் என்று பண்டாரத்தார் என்று அழைத்தார்கள். இவர் ஊரில் பெண்கள், பத்தை இடித்து தும்பு இழுத்து வைப்பதை வாங்கி கன்னியாகுமரி கடற்கரையில் உள்ள மணவாளக்குறிச்சி துறைமுகத்தில் கொண்டு சேர்த்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்துவந்தார். ஆங்கிலேயர் காலத்தில் இவை ஏற்றுமதி செய்யப்பட்டு பனங்கயிறாக இறக்குமதி செய்யப்பட்டது பனங்கயிறு பலவித கட்டும் உபயோகியாக உபயோகப்பட்டது. அப்போது பிளாஸ்டிக் கண்டுபிடிக்க வில்லை. தோண்டி கயிறு கமலைக் கயிறு என்று பல தர கயிறுகள் உபயோகித்தார்கள் வடக் கயிறு இது மூன்று பிரியிலிருந்து ஆறு பிரி வரை சேர்த்து பின்னப்பட்டிருக்கும் மிகவும் உறுதியாக இருக்கும் வடக் கயிற்றைத்தான் தோட்டங்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் கமலைக் கயிறாக உபயோகிப்பார்கள். கார்த்தர் பிறப்பு மாதத்தில் பெண்கள் ஊஞ்சல் ஆடுவதற்கு வடக் கயிற்றில் பனை மட்டையை உட்காரும் இருப்பிடமட்டையாக கட்டி ஆட்டுவார்கள்.



செல்: 98405 57997, 98415 49955

**V.S.குமார் ரியல் எஸ்டேட்**

வீடு, மனை, வாங்க விற்க அணுகவும், வீடு, ஆபிஸ், கடை, குடோன் கம்பெனி வாடகைக்கு அணுகவும்.
டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வளசரவாக்கம், சென்னை-87



M.செசீலி ஸ்டீபன்.
இராஜாவூர்,செல்:9486356746

# தேன் - தேனீக்கள்:

தேன் கிடைப்பது மிகவும் அரிதாக இருந்த காரணத்தால் மட்டும்தான் மருந்துக்காக உபயோகிக்க கட்டாயமாக இருந்தது. ஆனால் தேன் ஒரு நல்ல ஊட்டச்சத்து நிறைந்த உணவு. சீனி, ஜாம் என்ற உபயோகத்தில் தேனையும் உணவாக எடுக்கும் தன்மையில் தேனீ வளர்த்து தேன் உண்டு வாழ முன்வரவேண்டும். மேலும் ரப்பர் மரத்திலிருந்து சேகரிக்கப்பட்ட தேன் சிறிது கருமைநிற மரத்தின் நிறத்தில் இருக்கும் எல்லா புதிதாக சேகரிக்கப்பட்ட தேன்களிலும் சிறிது தண்ணீர் கலப்பு இருக்கும். இந்த தண்ணீர் தேனீக்கள் பூக்களிலுள்ள பனிதுளிகள் தண்ணீர் போன்ற கலப்பால் உள்ளவை தண்ணீரோடு நாம் வைத்திருந்தால் சீக்கிரம் புளித்து சளித்துவிடும். ஆகவே எடுத்த தேனை சூரிய வெப்பத்தில் ஒரு அகலபாத்திரத்தில் ஊற்றி வைத்தால் சூரிய வெப்பத்தில் தேனில் கலந்துள்ள நீர் நீராவியாகி தேனில் நீர் இல்லாமல் சுத்தமாகும் இப்படி இரண்டு மூன்று நாட்கள் சூரிய வெப்பத்தில் வைக்க வேண்டும். தேனின் நிறம் அப்படியே இருக்கும். தேன் எடுத்தவுடன் அந்த தேன் இளம் தேன் அதிக சத்துடையது. வெகுநாள் உள்ள தேன் முற்றிய தேன். பாட்டலின் மேல் பகுதியில் சிறிது நுரையுடன் இருக்கும். சிறிது புளிப்பு ருசியும் இருக்கலாம். சிறிது ஆல்கஹால் தன்மையையும் உடையதாக இருக்கும், இதை தேன் கலப்பு என்றும் கெட்டு போய்விட்டது என்றும் கருதவேண்டாம். மேலும் தேனில் சர்க்கரை பூவிலிருந்து எடுக்கும் மதுவிலே கொஞ்சம் இருப்பதால் சில நாட்களுக்கு பின் முற்றிய தேனில் கற்கண்டுபோல் (கிறிஸ்டல்) அடியில் சிறிது உண்டாகும். இதை கலப்படம் என்று கருத வேண்டாம் சூரிய வெப்பத்தில் சிறிது நேரம் வைத்தால் சர்க்கரை பாகம் இளகி திரும்பவும் சாதாரண தேனாக மாறிவிடும். தேனீக்களுக்கு சீனி தண்ணீரில் கலந்து சூடாக்கி சிரப்பாக செய்து உணவாக கொடுப்பார்கள். அதை உண்டு தேனீக்கள் தன் உடலில் வயிற்றிலுள்ள ஒரு சுரப்பு நீரால் தேனாக்கி தேன் அடையில் தேன் சேர்க்கும். எப்படி பசுமாடு வைக்கோலை சாப்பிட்டு, பருத்திக் கொட்டை, பழந்தண்ணீர் குடித்து எல்லா வகை வைட்டமினும் கொண்ட பால் தருகிறதோ அதே போல் தேனீக்கள் சீனி தண்ணீர் குடித்தாலும் தேனாக மாற்றும் சக்தியுடைய தேனைத்தான் சேர்க்கிறது. இதில் முக்கியமாக தெரிய வேண்டியது மழைக்காலம், கோடைக்காலம் அதிக காற்று புயல் வீசும் காலங்களில் தேனீக்கள் வெளியே சென்று தேன் சேகரிப்பது கடினம் மழையில் நனைகிறது, பூவிலும் தண்ணீர் நிரம்பி இருக்கும். எப்படி மழைக்காலங்களில் பனைமரத்து பதனீர் கலையம் பதநீரோடு மழைத்தண்ணீரும் சேர்ந்து அதிக பதநீர் இனிப்பு குறைந்து கிடைக்கிறதோ அவ்விதமே பூங்களிலும் தண்ணீர் மதுவுடன் கலந்திருக்கும் ஈக்கள் மழையில் நனைவதால் பறந்து செல்ல கடினம். கோடைக்காலங்களில் பூக்கள் அதிகம் கிடைக்காது. அந்த காலங்களில் பூக்கள் அதிகம் கிடைக்காது. அந்த காலங்களில் மட்டுமே ஈக்களின் உயிர் காப்பாற்ற உணவுக்காகவே சீனி சிரப்பை கொடுக்கிறார்கள். மழைக்காலம், கோடைக்காலம் காற்று புயல் வீசும் காலம் சீனிப்பாகு கொடுக்கும் போது ஒரு தட்டையான பாத்திரத்தில் சீனி சிறப் (அதாவது ஒரு கப் சீனிக்கு ஒரு கப் தண்ணீர் சேர்த்து சூடாக்கியது) வைத்து அதில் வாழை இலை துண்டுகள் தென்னை ஓலை துண்டுகளை சிறிதாக போட்டு கூட்டின் மேல் வைப்பார்கள். இலைகளில் மேல் இருந்து திரவ நிலையில் உள்ள சீனி சிரப்பை உணவாக உண்டு உயிர் வாழும். தான் சேகரித்த சேமித்துவைத்துள்ள செல்களிலுள்ள தேனையும் உணவாக உட்கொள்ளும் இந்த காலங்களில் தேனீ வளர்ப்போருக்கு தேன் கிடைப்பது அரிது. சீனி சிரப்பை தன் உயிர் காப்பற்ற இந்த உணவு உதவும் தேனரையில் தேனாக மாற்றி சேமிக்காது. சேமித்தாலும் சேமித்த உணவு தோனாக மாறும் தன்மையை உடையது. தேன் விற்கும் சிலர் தேன் சீனிபாகு கலந்தது என்று பார்ப்பதற்கு ஒரு கண்ணாடி டம்ளரில் தண்ணீரை வைத்து ஒரு கரண்டியில் தேனை எடுத்து தண்ணீர்உள்ள டம்ளரில் நூல்போல் மெதுவாக ஊற்றவேண்டும் சீனிபாகு கலந்திருந்தால் வழியிலேயே தண்ணீரோடு கரைந்துவிடும் சுத்த தேனாக இருந்தால் நேரே டம்ளரின் அடியில் தங்கும் பின் கரண்டியால் கலக்கினால் மட்டுமே தண்ணீரோடு கலக்கும். இது ஒரு சுலபமான முறை மற்றும் சில அமில முறையிலும் பார்க்கலாம் ஒரு தட்டில் சிறிது தேனைவைத்து அத்துடன் 5அல்லது 6-சொட்டு அனிலின் குளோரைடு சேர்த்து நன்றாக கலக்கினால் கலப்படமான தேன் சிவப்புநிறமாக மாறும். சுத்தமான தேன் நிறம் மாறாது. தேன் குழந்தை பருவத்திலிருந்து முதுமை பருவம் வரை வயது வித்தியாசமின்றி அருந்தலாம் எந்த சீதோஸ்ண நிலையிலும் (வெப்பசூடான கால நிலை குளிர்ந்த வெப்பநிலையிலும் அருந்தலாம். இது இயற்கை கொடை நாம் உண்ணும் உணவுகளில் பால், பிரெட் (ஜாமுக்குபதிலாக), புட்டு, ஆப்பம் போன்ற உணவுகளில் தேனை உபயோகிக்கலாம். எல்லா வயதினருக்கும் நல்ல ஊட்டச்சத்தாக உள்ளது. அதுபோன்று நாம் அருந்தும் பழரசங்களான குளிர்பானங்கள் ஆரஞ்சு, மாம்பழம், மாதுளம், பனம்பழங்களில் சீனிக்கு பதிலாக தேனை உபயோகித்தால் உடலுக்கு நல்லது. ஊட்டச்சத்திற்காகவும், அருந்துவதற்கு ஏற்ற நல்ல புத்துணர்வு உள்ளதாகவும் திகட்டாத ரசமாகவும் இருக்கும். எந்த சீதோஸ்ண நிலையிலும் உடலின் சீதோஷணத்துக்கு ஏற்றதாக இருக்கும் விலை உயர்ந்த ஊட்டச்சத்துகளையும் டானிக்குகளையும் நாம் வாங்குகிறோம். இயற்கை உணவான தேனை வாங்கி உடல் ஆரோக்கியம் காப்பாற்ற தயங்கவேண்டாம். கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் Y.M.C.A தேனீ கூட்டுறவு சங்க நிர்வாகம் இங்கு சுத்தமான தேன் நியாய விலைக்கு கிடைக்கிறது. மார்த்தாண்டம், குளித்துறை, களியாக்காவிளை வரையுள்ள கிராம மக்கள் தேன் பெட்டிகள் பெட்டியின் உள்வைக்கும் சட்டங்கள் தேனீ பண்ணைகள் வைத்து தேனீ வளர்ப்பதை தங்கள் குடிசை தொழிலாகவே செய்து வருகிறார்கள். தேன் எடுத்து மார்த்தாண்டம் தேனீ கூட்டுறவு சங்க நிர்வாகத்தில் வினியோகம் செய்கிறார்கள். அங்கே சுத்திகரிக்கப்பட்டு சேமித்தல் ஏற்றுமதி செய்தல் சில்லரை வியாபாரம் செய்தல் முதலியன செய்கிறார்கள். தேன் மெழுகை பக்குவப்படுத்தியும் விலை உயர்ந்த உபகரணங்கள் செய்யும் தொழிலுக்கு வினியோகம் செய்கிறார்கள். மெழுகு, வார்னீஸ் வாசனை பொருட்கள் போன்ற உயர்தர பொருட்களுக்கு உபயோகப்படுகிறது. - தொடரும்...........



# வா....வியாபாரி ஆகலாம்

## 20.விபரம் சொல்லலாமா...?

**அமுதா B.பாலகிருஷ்ணன்**



கூடாது...!

சொன்னால், சமயங்களில் வம்பாகிவிடும்.

நம்ம வாயிலிருந்து எந்தத் தகவலும் அனாவசியமாகப் போகக் கூடாது.

ஒரு கடையில பிராவிடன்ட் பண்டு ஆபீசருங்க வந்து குமாஸ்தாக்களின் வருகைப் பதிவேடு, சம்பள ரிஜிஸ்தர், எல்லாம் செக் பண்ணிகிட்டிருந்தாங்க.

யார் யாருக்கு எவ்வளவு சம்பளம் என்ற விபரத்தைப் பார்த்துவிட்டு, அவை சரிதானா என்று சரிபார்த்து கொள்வதற்காக, ஒவ்வொருத்தராகச் கூப்பிட்டு, "உனக்கு சம்பளம் எவ்வளவு"ன்னு கேட்டாங்க.

இவன், நம்ம முதலாளி நம்மள நல்லா வைச்சிருங்காங்கள, நம்ம முதலாளிய பெருமையா நினைக்கட்டும் என்று, சார் எங்க முதலாளி, ரொம்ப நல்லவங்க, எனக்கு ரெண்டாயிரம் ரூபா சம்பளம் தர்றாங்க, அதுபோக, மேற்செலவுக்குக் கூட ரூபா தருவாங்க"ன்னு பெருமையாகச் சொன்னான்.

அவன் சொன்னதைப் பார்த்து, அடுத்தவங்களும் அதே மாதிரி, ஆயிரம் ரெண்டாயிரம்னு.. அளந்து விட்டாங்க.

ஆனால் அவங்க சம்பளமோ, ஏழுநூறு, எண்ணூறு ஆயிரம்... இந்த மாதிரிதான் ரிஜிஸ்டரில் இருந்தது.

இவங்க சொன்னதுக்கும், ரிஜிஸ்தருக்கும் சம்பந்தமேயில்லை.

"என்ன சார்.. பிராவிடன்டு பணம் கட்டுறதுக்குப் பயந்து, சம்பளத்தைக் குறைச்சு கணக்கு எழுதுறீங்களா...? ன்னு ஆபிசர்கள் கேட்க, முதலாளிபாடு தர்ம சங்கடமாயிடிச்சு..

அதனால், யாராவது, ஏதாவது கேட்டால், தெரியலை,கவனமில்லை, ஞாபகமில்லை..." இப்படி ஏதாவது சொல்லி நழுவிக்கொள்ள வேண்டும்.

முதலாளி கடையில் இருக்கும் போது, போன் வருகிறது, நாம் போனை எடுக்கிறோம், "முதலாளி இருக்கிறாரா"-ன்னு கேட்கிறாங்க, இருக்கிறாங்கன்னு சொல்லணுமா, இல்லைன்ன சொல்லணுமா...?

உங்களுக்காக ஓர் உண்மைச் சம்பவம்!

எனது மிக நெருங்கிய நண்பர் ஒருவர், தனது உதவியாளராக, ஒரு முறுக்கு மீசைக்காரரை வைத்துள்ளார். அந்த உதவியாளர் அவருக்கு மிகவும் பக்கபலமாக இருப்பவர்.

வெளியில் இருந்து எந்த போன் வந்தாலும் அவர்தான் எடுப்பார்.

அவர் பேசுகின்றவிதமே தனி அழகு

"ஹலோ... பரந்தாமன் அண்ணாச்சி இருக்காங்களா" இது நாம்.

இருக்காங்க, இல்லைன்னு சொல்லமாட்டார்.

"அண்ணாச்சி யார் பேசறீங்க...?"

........... அண்ணாச்சி சரவணமுத்து அண்ணாச்சியா பேசுறீங்க... எங்கயிருது... அமிஞ்சிக்கரையிலயிருந்தா பேசுறீங்க..." ன்னு சத்தமா கேட்பார்.

அப்படின்னா என்ன அர்த்தம்...? இரு இப்படிக் கேட்கும் போதே, அந்த முதலாளி யோட முகபாவத்தைப் பார்க்குறார்னு அர்த்தம்.

"சரி கொண்டா"ங்கிற மாதிரி சைகை காட்டினால்,

"கொஞ்சம் இருங்க அண்ணாச்சி, இந்தா அண்ணாச்சிகிட்ட கொடுக்கிறேன்"னு போனைக் கொடுப்பார்.

"வேண்டாம், இல்லைன்னு சொல்லிடு"-ங்கிற மாதிரி முதலாளி சைகை காட்டினால்,

"அண்ணாச்சி இல்லியே அண்ணாச்சி"ன்னு ரொம்பவும் மரியாதையாச் சொல்வாரு.

"இல்லியே.. இப்பதான வீட்டுக்குப் போன் பண்ணினேன்... கடைக்குக் கிளம்பி கால் மணி நேரம் ஆச்சுன்னு சொன்னாங்களே"- இது நாம்,

"ஆமா அண்ணாச்சி, அண்ணாச்சி வந்துவிட்டு அவசரமாய் போயிட்டாங்க... நீங்க போன் பண்ணுனதாச் சொல்றேன்... வேற ஏதும் சொல்லணுமா அண்ணாச்சி"ன்னு ரொம்பவும் பவ்யமாச் சொல்வாரு.

நாம போன் பண்ணும்போது, அந்த, முதலாளி, போன் பக்கத்துல இல்ல, இவர் சத்தமா பேசினாலும் கேட்காத தூரத்துல வெளியே நிக்கிறாங்க, அப்போ இவர், யாரு... பெரியசாமி அண்ணாச்சியா பேசுறீங்க... அண்ணாச்சி வெளிய காரு கிட்ட போனமாதிரி இருந்திச்சி, கொஞ்சம் இருங்க, ஒரு பையனை விட்டுப் பார்த்துட்டு வரச்சொல்றேன்"னு சொல்லிட்டு, இவரே போவார், முதலாளி, சரி வாரேன் லைன்ல இருக்கச் சொல்லுன்ன சொன்னால்,

"அண்ணாச்சி ஒரு நிமிஷம் லைன்ல இருங்க அண்ணாச்சி வர்றாங்க"ன்னு சொல்லுவார்,

முதலாளி, "வேண்டாம் இல்லன்னு" சொல்லிடுன்ன சொன்னால், "அண்ணாச்சி..., காரைக் காணோம் அண்ணாச்சி போயிட்டாங்க போலிருக்கு, வந்ததும் நீங்க போன் பண்ணுனதாச் சொல்லட்டுமா,... சரி ... வேற ஏதாவது சொல்லணுமா.. சரி... சரி அண்ணாச்சி ன்னு சொல்லி போனை வைப்பார்.

சரி போன் பண்ணும்போது, அந்த முதலாளி அங்க இல்லை... அப்பவும் உடனே இல்லன்னு சொல்ல மாட்டார். என்னா அப்படிச் சொன்னால் நமக்கு வித்தியாசம் தெரிஞ்சுடும்னு, அதே பாணியில், "யாரு நீங்களா அண்ணாச்சி... அண்ணாச்சி இன்னு வரலியே அண்ணாச்சி"ன்னு அதே ஸ்டைலில்தான் சொல்வார்.

இதே ஸ்டைலை நாமும் கடைபிடித்தால் நல்லது, கண்டிப்பாகக் கடைபிடிக்கணும்.

ஒரு கடையில, ஒரு குமாஸ்தா இன்னொரு குமாஸ்தாவிடம்,"

"நம்ம முதலாளி, எதுக்கு அப்பப்ப, வீட்டுக்கு போன் பண்றாங்க..?"ன்னு கேட்டான்

"அதுவா... முதலாளி கடையிலதான் இருக்காங்க, ஊர் சுத்தப் போகலன்னு, அவங்க வீட்டுக்காரம் மாவுக்குத் தெரியப்படுத்தத்தான் என்றான் இவன் தெரியப்படுத்தலாமா...?

Owned at Published by K.M.JULIAN from 21, Krishnappa Naickan Street, Mettupalayam, Chennai-33 and Printed by K.M.JULIAN at "NEW MERIT PRINTERS" No: 14/51, Reddykuppam Road, Saidapet, Chennai-15. Editor K.M.JULIAN.


பிறந்தநாள் வாழ்த்துக்கள்!
3.11.2024
M.G.R.நகர் மக்கள் தலைவர்
S.பால்பாண்டியன்

Regd.No.TN/CC(S) DN/112/2024-2026
Registered Newspaper RNI 55354/1992
Posted at Egmore RMS-1, Partrika Channal Posted on 7.11.2024
PUBLISHED ON FIRST OF EVERY MONTH WPP Licence No.TN/PMG(CCR)/WPP 315/24-26

If underlivered please return to INDIAN NADARMURASU
21,Krishnappa Naiyakan Street,
Mettupalayam, Chennai-600 033.

# 9ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி
## தீத்தாம்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.



பிரிவால் வாடும்

மறைவு:3.11.2014

எங்களது தாயாரும் திரு.ஆ.தங்கப்பநாடார் அவர்களின் துணைவியாருமான

**திருமதி.சீனியம்மாள் அவர்கள்**

**மகன்கள்-மருமகள்கள்**

T.சோலையப்பன்-புஷ்பம்,
T.பரமசிவன்-உண்ணாமலை
T.மாரியப்பன்-சந்திரா
T.முருகன்-தங்கம்

**மகன்கள்-மருமகள்கள்**

R.கருப்பசாமி -மாரியம்மாள்
A.சங்கரநாராயணன்-பொன்னுத்தாய்
V.பாலசுப்பிரமணியம்-சின்னத்தாய்
A.தங்கவேல்சாமி-ஜெயலட்சுமி

பேரன்கள், பேத்திகள், கொள்ளு பேரன்கள், கொள்ளு பேத்திகள் மற்றும் உற்றார் உறவினர்கள்

அடையார் ஆனந்த விநாயகர் காய்கனி & பழங்கள் அங்காடி

69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார்-20. செல்:9840038140.